போர்வாள்

4] 9-12-50 | வீச்சு

திராவிடத் தந்தை
தியாகராயர்

...ர்கள்: காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2 அணா

Best copy available

திக்கெட்டும் பரவுகிறது தி. மு. க. கீதம்!

போத்தனூர் தி. மு. க.

கோவை மாவட்டம் போத்தனூர் தி. மு. க. கிளைக் கழகக் கூட்டம், 3-12-50 அன்று, தோழர் அருள் நாதன் தலைமையிற் கூடி, கீழ்க்கண்ட புத்தாண்டு செயற்குழுவினரைத் தேர்ந்தெடுத்தது:—செயலாளர் பொன்னுசாமி துணைச்செயலாளர்: கே. ஆர். எஸ். மணி. பொருள் உறுப்பினர்: மதியழகன் விளம்பர உறுப்பினர்:—ஏ. கே. ராசு, எ. சிவப.

பெங்களூரில் புதிய கிளை

காடு கொண்டனஹள்ளி (பெங்களூர்):—இவ்வூரில் தி. மு. க. புதிய கிளை 26-11-50 அன்று நிறுவப்பட்டது. அவ்வமயம் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவினர்:—செயலாளர்: டி. பெருமாள் பொருள் உறுப்பினர் வி. எம். மாணிக்கம். விளம்பர உறுப்பினர் அ. ச. ராஜன்,

ஆலங்குடி தி. மு. க.

29-11-50 அன்று கூடிய கழகக் கூட்டத்தில், நாராண மங்கலத்தில் 144 தடையை விதித்தும், மக்கள் மீது தடியடி தர்பாரை நடத்தியும், அடக்குமுறையை ஓச்சிய ஆட்சியாளர் செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

கதிரம்பட்டி தி. மு. க.

1-12-50 அன்று கூடிய கழகக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தாண்டு செயற் குழுவினர்:— செயலாளர்: க. சி. கண்ணன். துணைச்செயலாளர்: க. சி. அரசு. பொருள் உறுப்பினர் கே. கே. மணி, பாக்கியம், கண்ணப்பன். செயற்குழு என். பி. சுப்பிரமணியன், ஆறுமுகம், சாலம்மை.

திருத்தணி தி. மு. க.

சித்தூர் மாவட்டம் தி. மு. க. கிளையின் செயற்குழு பின்வருமாறு:—செயலாளர்: ந. அ. ரஷீத். துணைச் செயலாளர்: சு. மா. கோவிந்தசாமி. பொருளாளர்:- மு. சு. வேணு. விளம்பர உறுப்பினர்:—மா. பத்பநாபன்.

தாத்தையங்கார் பேட்டை தி. மு. க.

25-11-50 சனிக்கிழமையன்று கூட்டப்பட்ட கூட்டத்தில் புத்தாண்டு செயற்குழுவிற்குச் செயலாளராக எம். எஸ். என். இராசன், துணைச்செயலாளராக ச. அயோத்தி, விளம்பர உறுப்பினராக மு. பெ. முத்துக்கருப்பன், பொருளாளராக ப. தாண்டவனும் தேர்ந்தெடுக்கப்பட்டபின், குன்றத்தூர் கொடுமையை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுப்பாளையத்தெரு (காஞ்சி) தி. மு. க. கிளை

3-12-50 ஞாயிறு மாலை கூடிய கழகக் கமிட்டிக் கூட்டத்தில் பின்கண்ட புத்தாண்டு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்;—வ. சி. வ. குழந்தை துணைச்செயலாளர் வ. வேலு. பொருள் உறுப்பினர்:—இ. எஸ். மணி. விளம்பர உறுப்பினர் கொ. சு. கிருஷ்ணசாமி.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டங்கள்

நடக்க இருப்பவை

9-12-50 சனிக்கிழமை

சைதாப்பேட்டை (சென்னை):—மாலை 6 மணி. சடையப்பமுதலி தெரு, தி. மு. க. ஆண்டு விழா. பேச்சாளர்கள்:—இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, தோழியர் சத்தியவாணிமுத்து.

10—12—50 ஞாயிற்றுக்கிழமை

கோலார் தங்கவயல்:—மாலை 4 மணி. தலைவர்:— என். சி. சபாபதி பேச்சாளர்கள்:—மா. இளஞ்செழியன் பி. ஏ (ஆனர்ஸ்,) பெங்களூர் தோழியர் விஜயலட்சுமி, டி. கே. சின்னதுரை.

தூத்துக்குடி:—ஈ. வெ. கி. சம்பத்

திருவையாறு:—மு. கருணாநிதி, கண்ணதாசன், அரங்கண்ணல், என். எஸ். இளங்கோ, ப. உ. சண்முகம், செல்லமுத்து.

மயூரநகரம்:—மாலை 6 மணி. காந்தி மண்டபம். பேசசாளர்கள: சி. என். அண்ணாதுரை எம். ஏ, தில்லை வில்லாளன் பி. ஏ. ஆனர்ஸ்.

போத்தனூர் (கோவை):—ஈரோடு அப்பாவு பொள்ளாச்சி இராமாநுசம், செழியன், இளங்கோ.

15-12-50 வெள்ளிக் கிழமை

தேவகோட்டை:—மாலை 6 மணி. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., இராம அரங்கண்ணல், கண்ணதாசன், ப. உ. சண்முகம்.

16-12-50 சனிக்கிழமை

சொக்கநாத புரம்:—மாலை 4 மணி. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., என். எஸ். இளங்கோ எஸ். கே. சாமி, கவிஞர் கண்ணதாசன், க. இரா, சத்தியேந்திரன் பி, ஏ. பி. எல்.,

17-12-50 ஞாயிற்றுக்கிழமை

செயங்குண்டம்:—மாலை 5 மணி. ஈ. வெ. கி. சம்பத், ஏ. கே. வேலன், என். சி. பன்னீர் செல்வம், ஏ. மெத்துசலா.

கீழ்ச்சந்தைப் பேட்டை (மதுரை): மாலை 6 மணி. எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், கே. எஸ். ராஜமான், எஸ். சி. மாணிக்கம்

கனம் மாதவமேனன், கல்வி அமைச்சர், சென்னை.

மலையாள நாடளித்த மாவீரர் என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் மூவர்ணக் கொடியினரால் 'முகஸ்துதி' செய்யப்படும் 'மகத்தான' அமைச்சரே,

வணக்கம்!

வணக்கம் என்ற இந்தச் சொல்லைக் கண்டாலேகூட தங்கட்குக் கடுங்கோபம் பிறக்கக்கூடும். பிடிசாபம் என்று தாங்கள் பேசக்கூடும். இழுத்துத் தள்ளுங்கள் அவனைச் சிறைச்சாலைக்குள் என்று 'இடிமுழக்கம்' புரியக்கூடும். அடைத்து வையுங்கள் காராக்கிருகத்தில் ஆறுமாத காலம் என்று அரிய தாக்கீது பிறப்பிக்கக்கூடும். 'ஏடா சூனுமானு, ஏன் உனக்கு இக் கெடுமதி?' என்று கண்களில் தீப்பொறி பறக்க, கனல் தெறிக்கும் நடையிலே தாங்கள் அற்புதக் கருத்துரை வழங்கக்கூடும். "நமஸ்தே என்று சொல்லாமல் வணக்கம் என்று கூறுகிறான் — வேண்டுமென்றே வட சொல்லை விலக்கிவிட்டுத் தூய தமிழ்ல் தைரியமாகப் பேசுகிறான்— மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமல்லவா அது — இந்தப் பாஷைத் துவேஷம் இறுதியில் வகுப்புத் துவேஷத்தில் அல்லவா முடியும்—ஆரிய மொழி வெறுப்பு கடைசியில் ஆரிய இன வெறுப்பாகத்தானே ஆகிவிடும்—கூடாது கூடாது, விட்டுவைக்கக் கூடாது இந்த விபரீதத்தை—153 ஏ இருக்கவே இருக்கிறது—எடுத்து வீசுங்கள் சட்டப் புத்தகத்தை அவன் மீது" என்று தாங்கள் தங்கள் அதிகாரிகட்கு 'உன்னத உத்தரவு' பிறப்பித்தாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன் — இது சகஜம் என்றுதான் இருந்துவிடுவேன். தங்கள் ஆட்சிப் பீடம் இதுவரை பிறப்பித்திருக்கிற பல உத்தரவுகள் கிட்டத்தட்ட இதுபோன்ற கோமாளித்தனமான உத்தரவுகள்தான் — எனவேதான், எனக்கு, வணக்கம் என்று கூறுபவர்கட்கெல்லாம் ஆறுமாத தண்டனை என்ற விபரீதமான உத்தரவை விசித்திரமான தங்கள் ஆட்சிப் பீடம் பிறப்பித்தாலும், ஆச்சரியம் அணுவளவும் ஏற்படாதென்று கூறுகிறேன்.

அமைச்சரே,

நான் மறைத்துப் பேச விரும்பவில்லை—பூசி மெழுகவும் ஆசைப்படவில்லை— வெளிப்படையாகவே கூறிவிடுகிறேன் — தங்களுடைய போக்கும் பேச்சும் நினைப்பும் நடவடிக்கையும் எனக்குச் சிறிதும் பிடிப்பதில்லை.

தங்களுடைய சொந்த வாழ்வைப்பற்றி அல்ல நான் குறிப்பிடுவது—அதைப்பற்றி எனக்கு அணுவளவும் தெரியாது—தெரியவேண்டிய தேவையுமில்லை—நான் குறிப்பிடுவது தங்களுடைய பொது வாழ்வைப் பற்றித்தான்—அதிலும் குறிப்பாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தபிறகு தாங்கள் கொண்டுள்ள நினைப்பு நடவடிக்கைகளைப் பற்றித்தான்.

தங்களுடைய சொற்பொழிவுகளைத் தினத்தாள்களில் படிக்கிற போதெல்லாம், ஒன்று, எனக்கு வேதனை பிறக்கும் — இப்படியும் ஓர், அமைச்சர் பேசுகிறாரே— பேசக்கூடாதே இதுபோல—பேசுவது, அவர் அமர்ந்துள்ள ஆட்சிப் பீடத்திற்கு இழுக்குத் தருமே என்ற வேதனை! இல்லையானல், வெட்கம் பிறப்பது வாடிக்கை — இப்படியெல்லாம் பேசுகிற அமைச்சர் ஒருவரை ஆளவந்தாராகக் கொண்டிருக்கிற ஆட்சியின்கீழ் நாம் வாழ வேண்டியிருக்கிறதே என்ற வெட்கம்!

தங்களுடைய சொற்பொழிவுகளைப் படிக்கிறபோது, வெட்கம்—வேதனை — இந்த இரண்டையும் தவிர வேறு ஏதாவது ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறதென்றால்—அது ஆச்சரிய உணர்ச்சியாகத்தான் இருக்கும்—இப்படிப்பட்டவர்களெல்லாம்கூட எப்படித்தான் அமைச்சர்களாகிவிட முடிகிறதோ என்ற ஆச்சரிய உணர்ச்சி!

ஆமாம் அமைச்சரே, தாங்களே தான் சற்று சிந்தித்துப் பாருங்கள், "வேதாசலம்—பாலசுந்தரம் முதலான சொற்கள் வடசொற்கள் என்பதற்காக அவற்றை விலக்கிவிட்டு மறைமலை—இளவழகன் முதலான தனித்தமிழ்ச் சொற்களைத் தங்கள் பெயர்களாக ஆக்கிக்கொள்கிறார்கள் சிலர். இது வெறும் பைத்தியக்காரத்தனம்" என்று, தாங்கள், அன்றோர் நாள் பேசினீர்களே, இந்த வாசகங்களை, நாளிதழ்களிற் கண்டபோது, எந்த நல்லறிவாளருக்கும், இப்படியும் பேசுகிறாரே ஓர் அமைச்சர் என்ற வேதனைதான் பிறக்குமே தவிர, ஆகா என்ன அற்புதமான கருத்து —என்ன அழகான எண்ணம் என்று போற்றிப் புகழ்ந்து பாராட்டுத்தாள் வாசித்துக் கொடுக்கவா தோன்றும்?

தமிழன், தன் பெயர், தன் மொழியிலே இருக்க வேண்டுமென்று விரும்புகிறான் — அது, தனக்கு உரியது அல்லாத வேற்று மொழியிலே இருந்தால், அதை மாற்றிவிட்டுத் தன்னுடைய சொந்த மொழியிலேயே தனக்குப் பெயர் சூட்டிக்கொள்ள முனைகிறான். இதிலே தவறென்ன இருக்கிறது?

ஆங்கிலேயன், தன் பெயர், அட்லி என்றோ சர்ச்சில் என்றோ எட்வர்ட் என்றோ எதல்ரெட் என்றோ தன் மொழியில் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவானே தவிர, ஏழுமலை என்றோ ஏகாம்பரம் என்றோ மாதவமேனன் என்றோ கோபாலரெட்டி என்றோ வேற்றுமொழியில் இருக்கவேண்டுமென்று விரும்புவான்?

அதுபோலவே ஒரு ஜெர்மானியன், தன் பெயர் ஹிட்லர் என்றோ கொயரிங் என்றோ வான் பேபன் என்றோ பிஸ்மார்க் என்றோ இருப்பதைத் தான் வரவேற்பானே தவிர பட்டேல் என்றோ நேரு என்றோ கிருபாலனி என்றோ ஜெயப்பிரகாஷ் என்றோ இந்திய மொழிகளில் இருப்பதையா வரவேற்பான்?

ஆங்கிலேயனும் ஜெர்மானியனும் மட்டுமா, உலகத்திலே, எந்த மனிதனும், தன் பெயர், தன் அருமைத்

தாய் மொழியிலே இருக்கவேண்டுமென்று தான் விரும்புவான்—வேற்று மொழியிலே இருக்கக் கூடாது என்றுதான் ஆசைப்படுவான்—அப்படி வேற்று மொழியிலே இருக்குமானால், அதை மாற்றிக் கொள்ளத்தான் துடியாய்த் துடிப்பான்.

தனக்கென்று ஒரு மொழி இருக்க, அதைவிடுத்து வேற்று மொழியிலே தனக்குப் பெயர் சூடிக்கொள்வது, தன் மொழிக்குத் தான் செய்யும் துரோகம் என்று தான் எந்த மொழியானாலும் எண்ணுவான்—தமிழனும் அப்படித்தான் எண்ணுகிறான்—அப்படி எண்ணுகிற காரணத்தால்தான் தன் பெயர் வேற்று மொழியில் இருக்குமானால் அதைத் தமிழாக்கிக் கொள்கிறான்.

இதுவா குற்றம்?

இதுவா தவறு?

இதுவா பைத்தியக்காரத்தனம்?

இந்தச் செயல் பிழைமிகு செயலானால், அமைச்சர் அவர்களே, தங்களுக்கு முன் இருந்த அன்பர் அவினாசியார், பீச் போர்ட் பார்க் என்றிருந்த புகைவண்டி நிலையங்களின் ஆங்கிலப் பெயர்களை அகற்றிவிட்டு கடற்கரை, கோட்டை, பூங்கா என்ற செந்தமிழ்ச் சொற்களைச் சூட்டினாரே அந்நிலையங்கட்கு—அதுவும் பிழைபடு செயலாகத் தானே கருதப்பட வேண்டும்?

அல்ல—அல்ல—அது பிழைமிகு செயலே அல்ல—தமிழ் நாட்டின் ஊர்ப் பெயர்கள் தமிழிலே இல்லாமல் ஆங்கிலத்திலே இருப்பது தமிழருக்கு அவமானம் தரும் நிலைமை—எனவேதான் தமிழ்ப் பெயர்கள் சூட்டப்பட்டன அத் தமிழ்நாட்டு ஊர்கட்கு என்று தாங்கள் விடை அளிக்கக்கூடும்.

“ஆங்கிலம் அந்நிய மொழி—ஆகவே அம்மொழியினால் நம் புகைவண்டி நிலையங்கள் அழைக்கப்படுவது அவமானம் தரும் நிலைமை” என்று தாங்கள் கூறுவது நியாயமாகுமானால், ஆரியம் அந்நிய மொழி—ஆகவே அம்மொழியினால் நம் பெயர்கள் அமைந்திருப்பது ஆகாது ஆகாது” என நாங்கள் கூறுவதுமட்டும் எப்படி பைத்தியக்காரத்தனமான பாழுஞ் செயலாக முடிந்து விடும்?

‘பீச்’ [Beach] — ஆங்கிலம்! எனவே அது அகன்றது! ‘கடற்கரை’—நம் தமிழ்! எனவே அது புகுந்தது!

அதுபோலத்தான்,

வேதாசலம் — வடமொழி! எனவே அது தொலைந்தது! மறைமலை—செந்தமிழ்! எனவே அது நுழைந்தது.

‘பீச்’ மறைந்து, ‘கடற்கரை’ தோன்றியிருப்பது எந்தவகை நீதியைச் சேர்ந்த நற்செயலோ, அதே வகை நீதியின்பாற்பட்ட நேரியதோர் பணிதான், ‘வேதாசலம்’ தொலைந்து, ‘மறைமலை’ உருவாகியிருப்பதும்.

இரண்டும் இரண்டும் நான்கு என்பது எப்படி நியாயமோ, அப்படித்தான், நான்கும் நான்கும் எட்டு என்பதும் நியாயமாகும்.

ஒன்றை ஒப்புக்கொள்பவர்கள் மற்றொன்றையும் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். அதுதான் முறை; அதுதான் நியாயம்.

ஆனால், அமைச்சரே, தாங்கள், இரண்டும் இரண்டும் நான்கு என்பதைமட்டும் ஒப்புக்கொள்கிறீர். நான்கும் நான்கும் எட்டு என்பதை ஏற்க மறுக்கிறீர். ‘பீச்’, ‘கடற்கரை’யாக மாறவேண்டியதுதான் என்பதை ஒப்புக்கொள்கிறீர். ஆனால், ‘வேதாசலம்’, ‘மறைமலை’யாக மாறுவதைமட்டும் பைத்தியக்காரத்தனம் என்று எள்ளி நகையாடுகிறீர்.

அர்த்தமற்ற வாதங்களை இதுபோல அடுக்கடுக்காக எழுப்புவது அமைச்சர் ஒருவரிடம் அணுவளவும் இருக்கக்கூடாத செயல். ஆனால், தங்களிடமோ அச் செயல் அமோகமான அளவுக்குக் காணப்படுகிறது. எனவேதான் தங்கள் “எழில் மிகு” கருத்துரைகளை ஏடுகளிற் பார்க்கிறபோது, என் போன்றவர்க்கெல்லாம், இப்படியும் பேசுகிறாரே நம் அமைச்சர் என்கிற வேதனையும் வெட்கமும் ஒருங்கே உண்டாகிவந்தன.

ஆனால், சென்ற கிழமை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்புவிழா நடைபெற்றபோது, தாங்கள் ஆற்றிய பட்டமளிப்புவிழாப் பேருரையைப் பத்திரிகைகளிற் கண்டேன்'—கண்டதும், உண்மையாகவே கூறுகிறேன், தங்களைப்பற்றி எனக்கு இதுவரை இருந்துவந்த வேதனை, துயரம், வெட்கம், சஞ்சலம் அவ்வளவும் மறைந்துவிட்டன — மட்டற்ற மகிழ்ச்சி, என் உள்ளத்தில் துள்ளி விளையாடலாயிற்று.

தங்கள் பேருரையைப் பத்திரிகைகளில் கண்டபோது, அது, தங்களால் ஆற்றப்பட்ட சொற்பொழிவு என்பதை, என் உள்ளம் முதலில் நம்பவே முடியாது என்று தான் மறுத்து விட்டது. செச்சே—இருக்கவே இருக்காது—மந்திரி மாதவனாரா இப்படியெல்லாம் தீவிரக் கருத்துக்களை அள்ளி வீசியிருப்பார்—ஒருக்காலும் இருக்காது என்றுதான் என் உள்ளம் திருப்பித் திருப்பிக் கூறலாயிற்று. தங்கள் சொற்பொழிவை ஒரு முறைக்கு இருமுறை, இருமுறைக்கு மும்முறை, படித்துப் படித்துப் பார்த்தேன். அப்படி மீண்டும் மீண்டும் படிக்கப் படிக்க, அந்தச் சொற்பொழிவு தங்களுடையதாக இருக்காது என்ற எண்ணம் மேலும் மேலும் வலுப்பெறலாயிற்றே தவிர சிறிதளவும் குன்றந்திடவில்லை.

ஆனால், கடைசியிலே, கண்களை நன்றாகக் கசக்கிக்கொண்டு பார்த்தேன்—தாங்கள் ஆற்றிய சொற்பொழிவு என்றுதான் குறிப்பிடப் பட்டிருந்தது—ஒரு பத்திரிகையை

திரு. வி. க. மன்றத் திறப்புவிழா

3-12-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு சென்னை ஓட்டேரியில் திரு. C பக்கிரிசாமி பிள்ளை பி. ஏ. எம். எி தலைமையில் நடைபெற்றது தோழர் C. C. அந்தோணிபிள்ளை M. C. திரு. வி. க. படத்தைத் திறந்து வைத்தார். போர்வாள் ஆசிரியர் காஞ்சி. மணிமொழியார், ஜெகநாதன், கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தோழமைக் கழகம்

[10-வது வட்டம்]

10—12—50 ஞாயிறு காலை 10 மணிக்கு, 83, தையப்ப முதலி தெருவில், தோழர் ஏ. ஆர். சேஷாசலம் தலைமையில், **வள்ளுவர் வகுத்த வழி** என்பதுபற்றிப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவர்.

மட்டுமல்ல, பல பத்திரிகைகளைப் பார்த்தேன்—சொற்பொழிவு, தங்களுடையதுதான் என்பது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. அப்படித் தெரிந்ததுதான் தாமதம், என்னை அறியாமலே என் உதடுகள், வாழ்க மாதவனார் என்று முணுமுணுக்கத் தொடங்கிவிட்டன. அந்த அளவுக்குத் தங்கள் சொற்பொழிவிலே பெரும்பகுதி, அசல் சூனாமானா பிரசாரமாகவே இருக்கிறது.

தாங்கள், இதுவரை திராவிடர் இயக்கத்தை எத்தனையோ முறை ஏசியிருக்கிறீர்கள் — எண்ணற்ற முறை எங்கள்மீது ஆத்திர அனலை வீசச் செய்திருக்கிறீர்கள் — சட்டம் எனும் கோடரிகொண்டு எங்கள் முன்னேற்றக் கழகத்தை வெட்டி வீழ்த்தப் பற்பலமுறை முயன்றிருக்கிறீர்கள்— அதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது இயற்கையாகவே எனக்குக் "கோபம்" தங்கள்மீது ஏற்படத்தான் செய்கிறது — ஆனால் இப்போது தாங்கள் ஆற்றியுள்ள பட்டமளிப்பு விழாப் பேருரையை ஒரு முறை நினைத்துப் பார்க்கிறேன்— பார்த்ததும் எனக்குத் தங்கள்மீதுள்ள "கோபம்" அவ்வளவும் குறைந்து, கொஞ்சம் "பாசம்" கூட ஏற்பட்டுவிடுகிறது.

"மனிதனுக்கு மிக முக்கியமாக இருந்தாக வேண்டிய பண்பு ஒன்றிருக்கிறது—அதுதான் அஞ்சாமை.

"இந்த அஞ்சாமைப் பண்பாட்டை, உடலைப் பொறுத்த அஞ்சாமை, அறிவைப் பொறுத்த அஞ்சாமை, ஒழுக்கத்தைப் பொறுத்த அஞ்சாமை என்று பற்பல கூறுகளாகப் பிரித்தெடுத்துத் தனித்தனியே ஒவ்வொரு கூற்றின் சிறப்பையும் விளக்குவது சிலருடைய வழக்கம்.

"ஆனால் என்னைப் பொறுத்த வரையில், இப்படியெல்லாம் பற்பல பகுதிகளாகப் பிரித்துக் கூறப்படும் பல்வேறு வகையான அஞ்சாமைப் பண்பாடுகள் அத்தனையும், ஒரு குறிப்பிட்ட அஞ்சாமைப் பண்பை அடிப்படையாக வைத்து, அதன்மீது எழுப்பப்பட்டுள்ள பல்வேறு கட்டிடங்கள் என்றே கருதுகிறேன்.

"நான் குறிப்பிடுகிற அஞ்சாமைதான் மற்ற எல்லா வகையான அஞ்சாமைகளுக்கும் உயிரூட்டும் ஊற்று; வற்றாத ஜீவநதி.

"அது எது தெரியுமா? அதுதான், உலகத் தத்துவங்கள் அத்தனையையும் தானே, தனக்காகவே சிந்தித்துப் பார்க்கிற துணிச்சல்."

இந்தக் கருத்துரைக் கொத்து, தங்களுடைய பட்டமளிப்புவிழாச் சொற்பொழிவிலே, ஒரு பகுதி. ஆமாம்! ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் இதயகீதம் எனத்தகும் வாசகங்களும் இவையேதான்!

"ஆண்டவனின் கட்டளை—அடியார்களின் கட்டளை—குருக்களின் கட்டளை—ஜீயர்களின் கட்டளை—புரோகிதர்களின் கட்டளை—வேதங்களின் கட்டளை — எந்தக் கட்டளைக்கும் அஞ்சி நடுங்காதே! உன் உள்ளம் என்ன கட்டளையிடுகிறதோ அந்தக் கட்டளைக்கு மட்டுமே அடங்கி நட"

"ஆண்டவன் சொல்லிவிட்டார் என்பதற்காகவே ஒன்றை நம்பிவிடாதே! வெகு காலமாக இருந்து வருகிறது என்பதற்காகவே ஒன்றை நம்பிவிடாதே! வேதங்கள் ஒப்புக்கொள்கின்றன என்பதற்காகவே ஒன்றை நம்பிவிடாதே! சாஸ்திரங்கள் செப்புகின்றன என்பதற்காகவே ஒன்றை நம்பிவிடாதே! நீயாகச் சிந்தித்துப் பார். உன் சிந்தனையில் அது சரி என்று பட்டால்மட்டுமே ஏற்றுக்கொள். இல்லையானால் அதனைக் கூறியவர் ஆண்டவனாகவே இருந்தாலும் சரி, அதனை அச்சம் தயை தாட்சண்ணியமின்றி ஒதுக்கித் தள்ளுவதே உன் கடமை. சுய சிந்தனையே உன்னுடைய பெறலரும் செல்வம்."

—இந்த சில வாக்கியங்கள்தான் தன்மான இயக்கத்தின் அடிப்படை, சுவர்கள், கூடம், மேல்தளம் எல்லாம்.

சென்ற முப்பது ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கம் தென்னாட்டில் செய்துவரும் சூறாவளிப்

நாடார்கள் சமூகத்தில் முதன் முதலாகக் கணவனை மணவிலக்கு செய்துவிட்டு மறுமணம் செய்துகொண்ட தோழியர். ஞான சௌந்தரி பட்டிவீரன் பட்டி தீவிர திராவிட முன்னேற்றக் கழக வீரர் திரு மதிப்பிரகாசம்.

இவர்கள் மறுமணம் 26-11-50-ல் சென்னையில் திரு V. P. மாணிக்கவாசக நாடார் தலைமையில் நடைபெற்றது. அறிஞர் அண்ணாதுரை தோழர்கள் K. A. மதியழகன், P. ராமசாமி, E. V. A. வள்ளிமுத்து, ஜகதீசன், மகாலிங்கம் ஆகியோர் மறுமணம் பற்றிப் பேசினர்.

பிரசாரத்தின் இரத்தினச் சுருக்கம் இந்த வாசகங்கள்தான்.

நீங்களே கவனித்துப் பாருங்கள், அமைச்சர் அவர்களே, நான் முன்னே எடுத்துக் காட்டிய தங்களுடைய பட்டமளிப்புவிழாச் சொற்பொழிவுக்கும், இதோ இங்கு நான் பொறித்துள்ள சுயமரியாதை இயக்கத் தத்துவ மொழிகட்கும் இடையே ஏதாவது வேறுபாடு இருக்கிறதா — ஏதாவது வேறுபாடு?

இல்லை!

எனவேதான் நான் கூறினேன், தங்களுடைய சொற்பொழிவு, அசல் சூனாமானா பிரசாரமாகத்தான் இருந்திருக்கிறது என்று! தவறு நான் கூறியது?

தாங்கள் மேலும் பேசியிருக்கிறீர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் :—

"சுயமாகச் சிந்தித்து அந்தச் சிந்தனையின் முடிவுப்படி நடப்பது என்று ஆரம்பித்துவிட்டால், எதிர்ப்பு, ஏராளமாக ஏற்படும்.

"அந்த எதிர்ப்பும் ஒருவகையினதாக இருக்காது. பற்பல வகையினதாக இருக்கும்.

"அந்த எதிர்ப்புச் சக்திகள், எல்லாச் சமயங்களிலுமே, நேருக்கு நேர் நின்று போராடும் என்றும் கூறமுடியாது. பல சமயங்களில், அவை பற்பல மாயாஜாலங்களைக் கையாண்டு, மிகத் தந்திரமான மிக வஞ்சகமான முறையிலேயெல்லாம் போராட்டத்தை நடத்த முனையும்.

"சுயசிந்தனைக்கு எதிர்ப்பு, உங்களுக்கு வெளியே இருந்து மட்டும்தான் வரும் என்று எண்ணவேண்டாம். உங்கள் உள்ளத்திலேயேகூட அதற்கு எதிர்ப்பு பிறக்கக்கூடும்.

"எதிர்ப்பு, ஏராளமாக இருக்கும்—பல்வேறு வகையினதாக இருக்கும்—எண்ணற்ற சூழ்ச்சிகளைக் கையாள்வதாக இருக்கும் — மிகவும் தந்திரமானதாக இருக்கும்—வஞ்சகத்தின் வடிவமாகவும் இருக்கும் —உங்கள் உள்ளத்தின் உள்ளேயும் இருக்கும்.

"சுய சிந்தனைக்கு உள்ள எதிர்ப்பு இவ்வளவு பலம் பொருந்தியதுதான். ஆனால் இவ்வளவு பலம் பொருந்திய எதிர்ப்பைக் கண்டு சிறிதும் மனம் தளராமல் துணிந்து முன் வந்து சுயமாகச் சிந்தித்து சுயமாகப் பணி புரியும் பண்பு

(19-ம் பக்கம் பார்க்க)

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

★

23—12—50, 24—12—50 தேதிகளில்

பெரிய காஞ்சிபுரம் ஹமீது அவுல்யா தர்கா மைதானத்தில்
அமைத்துள்ள அரங்கசாமி பந்தலில்

தலைவர். **சி. பி. சிற்றரசு**

துவக்குபவர். **ஏ. வி. பி. ஆசைத்தம்பி**

பொதுச்செயலாளர் சி. என். ஏ. மற்றும் இயக்க வீரர்கள் எல்லாம் பங்குகொள்வர்

இசை நிகழ்ச்சி

திருச்சி : எம். எம் மாரியப்பா
திருவாரூர் : டி. வி. சவசிவாயம்
நாகூர் : எம். அனிபா
சென்னை : கே. ஆர். செல்லமுத்து
காஞ்சி : கே. புண்ணியகோட்டி

நாடகங்கள்

கே. ஆர். இராமசாமி
சி. என். அண்ணாதுரை
பங்குகொள்ளும்
" சந்திரமோகன் "
" நீதிதேவன் மயக்கம் "

பொதுமக்களே! இயக்க வீரர்களே!! எல்லோரும் வாரீர் காஞ்சிக்கு!!!

செயலாளர்கள்,
சே. கோ. பெருமாள்,
டி. சபாபதி.

தொண்டர் படைத்தலைவர்கள்,
சி. பஞ்சாட்சரம்,
கே. டி. எஸ். மணி.

வரவேற்புக்குழுத் தலைவர்,
சி. வி. எம். அண்ணாமலை.

விளம்பர உறுப்பினர்கள்,
ஆர். கே. மூர்த்தி. இ. எத்துராசு.

கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த கனவான்களின் கருத்துரை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள்மீது அவதூறான எண்ணங்களைப் பரப்ப வேண்டுமென்ற நோக்கமோ நினைப்போ கொள்ளத் தேவையில்லாத நிலையில் இருப்பவர்கள். அரசியல் கட்சிகள் எதிலும் சேராமல் தனித்திருக்கும் கல்வித்துறை அறிஞர்கள். இத்தகு பண்பும் பொறுப்பும் மிக்க இந்த அறுவரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்தான், நாம் மேலே தந்துள்ள தாம்பர வட்டாரத்து உண்மைப் படப்பிடிப்பு, எழில்மிகு முறையில் பொருத்தப்பட்டுள்ளது.

கட்சி மாச்சரியத்தின் காரணமாகத்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்கள் இவர்கள் என்று யாருமே கூறமுடியாது. கட்சி எல்லைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள் இவர்கள். அரசியல் கட்சி எதிலுமே ஈடுபடாத நிலையில் இருப்பவர்கள்.

* * *

"தாம்பரத்தைச் சுற்றிலும் உள்ள சிற்றூர் வாசிகளிற் பெரும்பாலோர், அரைப்பட்டினி என்று சொல்லத்தக்க அவல நிலையிலேயே இருக்கின்றனர்.

"சென்ற 21 நாட்களை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த 21 நாட்களில், நான்கு நாள் அரிசியும், ஒரு நாள் சோளமும் மட்டும்தான் தரப்பட்டிருக்கிறது இந்த வட்டாரத்தில் உள்ள தாம்பரம் கூட்டுறவுக் கழகத்தின் பங்கீட்டுக் கடையில்!

"அதே 21 நாட்களில், ஒரு நாள் அரிசியும், இரு நாள் சோளமும் மட்டும்தான் தரப்பட்டிருக்கிறது தாம்பரம் கிராமப் பங்கீட்டுக் கடையில்.

"அதுபோலவே, அதே கால அளவிற்கு, மூன்று நாள் அரிசி மட்டும் தான் தரப்பட்டிருக்கிறது இரும்புலியூர் கிராமப் பங்கீட்டுக்கடையில்!

"அப்படித் தரப்பட்டிருக்கிற மிகக் குறைந்த அளவு அரிசிகூட புழுத்துப்போனதாகவும் உண்பதற்கு ஏலாததாகவும் இருக்கிறது

"அந்த அரிசியில் உள்ள கல்லையும் மண்ணையும் நீக்கி அரிசியைத் தூய்மைப்படுத்தினால், ஆறு அவுன்ஸ் என்று சொல்லி கடையில்வாங்கி வந்த அரிசி, இறுதியில் உலைக்குப் போகும்போது மூன்று அவுன்ஸ் என்ற அளவில்தான் நிற்கிறது.

"ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளைக்கும் ஆறு அவுன்ஸ் அரிசி என்று, ஆட்சியாளர்களால் விதிக்கப்பட்டுள்ளமுறைப்படி, முழுப்பங்கீட்டையும் பெறுகிறவர்கள் எங்கள் வட்டாரத்தில் யாருமே இல்லை.

"கணக்குப் போட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஒரு ஆளுக்கு ஒரு அவுன்ஸ் அரிசி என்ற முறைப்படிதான் இங்கே அரிசிப் பங்கீடு வழங்கப்படுவதாகத் தெரிகிறது.

"கள்ளச் சந்தையில், அரிசி, படி விலை ரூ 1-12-0 விற்கிறது. பெரும்பாலோரால் அவ்வளவு விலை கொடுத்து அரிசி வாங்க இயலவில்லை எனவே, எங்கள் வட்டாரத்தில் சிறிதளவு வேர்க்கடலை மட்டுமே சாப்பிட்டு உயிரை எப்படியோ உடலோடு ஒட்டவைத்துக்கொண்டிருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்."

தாம்பரத்திலே, 'பிள்ளைப் பேறு—குழந்தை நல விடுதி' என்று ஓர் அமைப்பு இருக்கிறது. அந்த விடுதியிலே, கர்ப்பிணிகளாக இருக்கும் தாய்மார்கட்கு இலவச மருத்துவம் செய்யப்படுகிறது. கர்ப்பிணிகள் அங்கே வந்து சில வாரங்கள் தங்கி, இலவச மருத்துவம் பெற்று, பிள்ளைப் பேறு முடிந்ததும், தங்கள் இல்லங்கட்குத் திரும்பிவிடுவது வழக்கம். அந்த வட்டாரத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு, இத் துறையில், அந்த விடுதி, அற்புதமானதோர் அருந்துணைவனாக இருந்துவந்திருக்கிறது நெடு நாட்களாக! ஆனால் சென்ற சில மாதங்களாக, அந்த வட்டாரத்தில் உணவுப் பஞ்சம் கடுமையானதாக மாறி, அந்தக் கர்ப்பிணிகளுக்குக் கிடைக்கவேண்டிய உணவுப் பங்கீடு அடிக்கடி கிடைக்காமற்போய், அவர்கள், அந்தோ பரிதாபம், பட்டினி கிடக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இந் நிலையில் அவர்களுக்கு என்ன மருந்து கொடுத்துதான் என்ன பலன் பெறமுடியும்? எனவேதான், மருத்துவ நிலைய நிர்வாகிகளாக இருக்கும் தோழியர்கள், நிலையத்தில் தங்கி உணவின்றி வாடி வதையும் கர்ப்பிணிகள் சிலரை உடனழைத்துக் கொண்டு, சென்னைக்கு வந்தனர் சென்ற மாதம் 21-ம் நாளன்று! நேரே கோட்டைக்குள் புகுந்தனர் — உணவு அமைச்சரைக் கண்டனர்—கண்டு, மேலே குறிப்பிட்டுள்ள வாசகங்களை அவர்முன் வைத்தனர்.

இந்தத் திடீர்த் தாக்குதலைக் கண்டு, திகைத்து விட்டார் கனம் ரோச் விக்டோரியா! அவருடைய திகைப்பும், திக் பிரமையும், "என்ன விடை கூறுவது இவர்கட்கு" என்ற எண்ணமும் ஏக்கமும், மேலும் வளரலாயின, மருத்துவநிலைய நிர்வாகத் தோழியர்கள், தங்கள் துயரக் காதையைத் தொடர்ந்து கூறியபோது!

விக்டோரியாவின் எதிரிலே, வேதனையின் விளக்கம்!

அந்தத் தோழியர்கள், துயரம் ததும்பும் குரலால், தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்கள்:

"எங்கள் நிலயம், இந்தக் கர்ப்பிணிகளுக்குத் தினமும் மருந்துகொடுக்க இப்போதும் தயாராகத்தான் இருக்கிறது. ஆனல், இவர்கள், உணவின்றிப் பட்டினி கிடந்து பரிதவிக்கும் இந் நிலையில், இவர்கட்கு மருந்து கொடுப்பதால் நன்மை ஏதும் விளையாதே என்றுதான் தயங்குகிறோம்.

"எங்கள் நிலயத்தில் மொத்தம் 18 கர்ப்பிணிகள் இருக்கிறார்கள்—அதில் 17 பேர், நவம்பர் முதல் தேதி முதல் அரைப்பட்டினியாகக் கிடக்கிறார்கள்.

"ஒரு வார காலத்திற்கு முன்னர், எங்கள் நிலயத்திலிருந்து, நான்கு வயது குழந்தை ஒன்றை, அது மிகவும் ஆபத்தான நிலையில் இருந்ததைக் கண்டு, ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம். பிறகு, குழந்தைக்கு என்ன நோய் கண்டிருக்கிறது என்று நாங்கள் விசாரித்தபோது, நோயின் பெயர் பட்டினி என்ற பதில் எங்கட்குக் கிடைத்தது.

"இரண்டு வாரங்கட்கு முன்னர், கிராமப் பெண் ஒருத்தி, தன் குழந்தையை, எங்கள் நிலயத்தில் கொண்டுவந்து, எங்கட்கு விலைகூறி விற்கத் தொடங்கினள். அந்தக் குழந்தையைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாகக் கொஞ்சம் பணமாவது அல்லது ஒரு சேலையாவது கொடுத்தால் போதும் என்று அவள் மிகவும் மன்றாடினள்.

"எங்கள் வட்டாரத்துக் கிராமங்களில், குழந்தைகளை விற்பது, இப்போது சர்வசாதர்ரண சம்பவமாகிவிட்டது."

கண்களிலே வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, அந்த மாதர்குல திலகங்கள், கனம் ரோச் விக்டோரியாவுக்கு. நிலைமையை, மேலும் விளக்கும் வகையில் தெரிவித்தார்கள்:—

"மூன்று வாரங்கட்கு முன்னல், பெண்கள் கிறித்தவக் கல்லூரியின் மாணவிகள் சிலரைக் கொண்டு, கோதுமை மாவிலிருந்து சப்பாத்தி செய்வது எப்படி என்பதை எங்கள் வட்டாரக் கிராமவாசிகளுக்குக் கற்றுக்கொடுக்க ஓர் ஏற்பாடு செய்திருந்தோம். ஆனல் அதற்குப் பிறகு, எங்கள் வட்டாரத்திற்கு, சென்ற மூன்று வாரங்கட்குமாகச் சேர்த்து, மூன்றுநாள் உணவுப் பொருள்தான் வழங்கப்பட்டது. எனவே எங்கள் சப்பாத்தி முயற்சி வெறும் கேலிக் கூத்தாகவே ஆகிவிட்டது.

"எங்கள் வட்டாரத்தில் வாழ்பவர்கட்கு அரிசிதான் பழக்கமான உணவுப்பொருள். அது கிடைக்கவில்லையென்றால், கேழ்வரகு அல்லது சோளம் இருந்தாலும் போதும. ஆனல் இப்போது, வேறு எந்த உணவுப் பொருள் கிடைத்தாலும் அதைக்கொண்டு திருப்தியடைய அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

"அவர்களுக்குச் சிறிதும் பழக்கமேயில்லாத உணவுப் பொருளை அனுப்பிவைத்தாலும் அதை எப்படிச் சமைத்து உண்பது என்பதை அவர்கட்குக் கற்பிக்க எங்கள் நிலயம் மகிழ்ச்சியுடன் முன்வரும் என உறுதி கூறுகிறோம்.

"இப்போது ஏற்பட்டுள்ள கடுமையான உணவுப் பஞ்சத்தைப் போலவே சென்ற ஆறுமாத காலத்தில் பலமுறை ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்டி, ஏதாவது உணவுப் பொருளை உடனடியாக எங்கள் பகுதிக்கு அனுப்பி உதவ வேண்டுகிறோம்."

உணவு அமைச்சர் விக்டோரியா ஒரு புறம் அமர்ந்திருக்கிறார்—அவருக்கு எதிரே நீண்ட மேஜை ஒன்று அமைந்திருக்கிறது — அதன் எதிர்ப்புறத்தே உள்ள நாற்காலிகளில் அமர்ந்த வண்ணம், மருத்துவ விடுதி நிர்வாகத் தோழியர்கள் மூவர், தங்கள் வட்டாரத்து வேதனையை, மேலே உள்ள சொற்கள் எனும் வடிவாக்கி, உணவு அமைச்சர்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றனர்—வேறோர் பக்கத்தே, நிலயத்தின் கர்ப்பிணிகள் பலர், சிதைந்த எலும்புக்கூடுகள் போல, தேய்ந்துபோன பல ஓவியங்கள்போல, பரிதாபச் சித்திரங்களாக நின்றுகொண்டிருக்கின்றனர்—இப்படி ஒரு படம் வெளிவந்திருக்கிறது சென்னை 'மெயில்' இதழிலே, நவம்பர் 21-ம் நாளன்று!—ஆமாம், படம்தான்! செந்தமிழகத்திலே, பட்டினிக் கொடுமை, எவ்வளவு குரூரமான முறையில், காட்டாட்சி புரிந்து வருகிறது என்பதை விளக்கும் கிராமீய வாழ்க்கைப் படம்!

* * *

பிள்ளைகளை விலைபேசி விற்கிறார்களாம் தாம்பாப் பகுதியிலே! அதுவும் சர்வசாதாரணமாக நடக்கின்றனவாம் இத்தகு நிகழ்ச்சிகள்!

உணவு அமைச்சர் கனம் விக்டோரியாவிடம், உள்ளம் உருக்கும் இந்த உண்மையை, மருத்துவ விடுதி மங்கையர்கள், வேதனை நிரம்பிய நெஞ்சத்தினராய், கண்ணீர்த் துளிகளையே தம் கருத்தை

"பிள்ளை வாங்கலையோ பிள்ளை !"—பரிதாபக் கூக்குரல்!

விளக்கும் தூதுவர்களாகக் கொண்டு, எடுத்து மொழிந்த நேரத்திலே, அமைச்சர் விக்டோரியாவின் நெஞ்சு நெகிழ்ந்ததோ இல்லையோ நாம் அறியோம். ஆனால், பத்திரிகையிலே, இந்தச் சேதியைக் கண்டபோது நம் இருதயம் இரண்டாகப் பிளந்துவிடும் போலாகிவிட்டது—அவ்வளவு கொடுமை நிறைந்த கோரச் சேதி இது.

"கத்தரிக்காய் வாங்கலையோ கத்தரிக்காய்!— இந்தக் கூக்குரலை நாம் கேட்டதுண்டு!

"அழகான துணிமணிகள் இருக்கின்றன— ஆநந்தத்துடன் வாங்கி அணியுங்கள் !"—இந்த அறிவிப்புப் பலகையை நாம் கண்டதுண்டு!

"சொம்பு தவலை வாங்குங்கள்—கெம்பு மோதிரம் வாங்குங்கள்—" இத்தகு வாசகங்கள் நம் செவியில் வந்து வீழ்ந்ததுண்டு.

"கண்ணாடி வளையல் வேண்டுமா—ரப்பர் வளையல் வேண்டுமா—ப்ளாஸ்டிக் வளையல் வேண்டுமா—பம்பாய் வளையல் வேண்டுமா—எது எடுத்தாலும் மூன்றணா, எது எடுத்தாலும் மூன்றணா"— இப்படிப்பட்ட பாசுரங்கள் அடிக்கடி நம் காதுகளைத் துளைத்ததுண்டு.

ஆனால், "பிள்ளை வாங்கலையோ பிள்ளை"— இப்படி, ஒரு கூக்குரலை நாம் இதுவரை கேட்டதில்லை; என்றேனும் ஓர் நாள் கேட்போம் என்று கனவு கண்டதுமில்லை.

ஆனால், இதோ, இராஜபாளையத்தார் ஆட்சிக் காலத்திலே, தாம்பரம் வட்டாரத்திலே, பிள்ளை வாங்கலையோ பிள்ளை என்ற வேதனைக்குரல் தாராளமாக எழுகின்ற கோராமையைப் பார்க்கின்றோம்!

"குழலினிது, யாழ் இனிது, என்பர், தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்" என்றார் திருவள்ளுவர் அன்றோர் நாள். ஆனால், இன்று, தாம்பரத்தில், பெற்றோர்கள், "குழந்தை இனிது குழந்தை இனிது என்பர், தம் வயிற்றுக் கவலை தினையளவும் இல்லாதவர்" என்ற புதுமொழியைத் தம் புதுமைச் செயலால் உருவாக்கும் புதிய காட்சியைக் காண்கிறோம்!

பத்திரிகையில் இச் சேதியைப் பார்க்கிறபோதே, நம் நெஞ்சு கொதிக்கிறதே, கண்களில் நீர் கசிகிறதே, இரத்தம் சில்லிட்டுப்போகிறதே, அந்தப் பரிதாபத்திற்குரிய அன்னை—தன் குழந்தைக்கும் 'உணவு தரும் விதத்திலே ஆட்சிமுறை அமைந்திராத காரணத்தால் அதனைப் பிரிந்து தீரவேண்டிய பெருங்கொடுமை நிலைமைக்குத் தூரத்தப்பட்டுவிட்ட அன்னை—அவளை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்—அவளுடைய உள்ளம் எவ்வளவு துடிதுடிக்கும் அவள் தன் குழந்தையை வேற்று மனிதருக்கு விலைகூறி விற்கிறபோது!—அதைச் சிறிது எண்ணிப் பாருங்கள்!

குழந்தைதான் தெய்வம், தெய்வம்தான் குழந்தை என்கிறார்கள்! குழந்தைச் செல்வம்தான் வேறெந்தச் செல்வத்தையும்விட மிகச் சிறந்த செல்வம் என்கிறார்கள்! இன்றைய குழந்தைதான் நாளைய பிரஜை என்கிறார்கள்! இப்படியெல்லாம் பாராட்டப்படும் பெறலரும் செல்வக் கொழுந்துகளைத்தான் வீதிகளிலே கொண்டு வந்து விலைகூறி விற்கிறார்கள் தாம்பர வட்டாரத் தாய்மார்கள்! அந்தோ! கொடுமை கொடுமை! தாங்கமுடியாத பெருங் கொடுமை இது!

ஆட்சியாளர்களோ அந்த அன்னைமார்களுக்குத் தேவையான அளவு அரிசிப் பங்கீட்டை அளித்தனரில்லை—கள்ளச் சந்தையில் கொள்ளை விலை கொடுத்து அரிசி வாங்கவோ அவர்கட்கு அணுவளவும் சக்தியில்லை—செல்வக் குழந்தைகளோ, பசி பசி எனப் பதறி அழுது, தேம்பித் திகைத்துத் துடிதுடிக்கின்றன — பார்க்கிறார்கள் தாய்மார்கள்—அந்தோ அந்தோ எனப் பதைக்கிறார்கள்—வேதனையால் மனம் துடிக்கிறார்கள்—கண்ணீர் சிந்திக் கதறி அழுகிறார்கள்—ஐயகோ மகனே இதுவோ உன் கதி என்று அரற்றுகிறார்கள்—கடைசியில்தான், வசதி உள்ளவர்கட்கு விற்றுவிடுவோம் குழந்தையினை, எங்காவது சென்று இன்பமாக இருக்கட்டும் என்ற எண்ணம் பிறக்கிறது—வருகிறார்கள் கடை வீதிக்கு குழந்தையோ குழந்தை என்று விலைகூறிய வண்ணமாக!

நாடாள வந்தவர்களின் நலிவுதரும் போக்காலே, பெற்றோரும் பிள்ளைகளும் இங்ஙனம் வெட்டிப் பிரிக்கப்படுகின்றனர்.

இத்தகு பரிதாப நிலையை இன்னமும் நீடிக்க விட்டுக்கொண்டிருக்கின்றனர் சென்னை ஆட்சியாளர்கள்.

நியாயமா ?

முறையா ?

ஆகுமா இப் போக்கு?

இராமராஜ்பம் என்பது இதுதானா?

இதுதான் இராமராஜ்யம் என்றால் இந்த இராமராஜ்யம் நமக்குத் தேவையா ?

பொதுமக்களே, விடை கூறுங்கள்.

* * * *

"எங்கேயோ இருக்கிறது தாம்பரம் வட்டாரம்—அங்கேதான் இருக்கிறது இத்தகு நிலைமை;

(18-ம் பக்கம் பார்க்க)

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்! வெறும் சோற்றுக்கு வந்ததிந்தப் பஞ்சம்!

பொன்விளைந்த பூமி என்று புலவர்கள் புகழ்ந்தனர் அன்று!

பஞ்சமோ பஞ்சம் என்ற பரிதாபக் கூக்குரல் இன்று!

வீதிகளில் பிள்ளைகள் விற்கப்படும் விபரீதம்!

வாழப் பிறந்தவர்கள் படும் வேதனை!

கிராமவாசியின் வாழ்வில் நடமாடும்மரணம்!

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்—வெறும் சோற்றுக்கு வந்ததிந்தப் பஞ்சம்!"

ஆம்! இந்த வேதனைக் கீதம்தான், தென்னாட்டின் காற்றில் எல்லாம் கலந்துவரும் நாதமாக இருந்து வருகிறது சென்ற ஐந்து ஆண்டுகளாக!

'பொன் விளைந்த பூமி' என்று புலவர்களால் பூரிப்புடன் புகழ்ந்துரைக்கப்பட்ட பெருமை மிகு நாடுதான் நம் திரு இடம். ஆனால் இத் திரு இடத்திலேதான் இதுபோது பஞ்சமோ பஞ்சம் என்ற பரிதாபக் கூக்குரல் திக்கெட்டிலுமிருந்து எழுந்தபடி இருக்கிறது!

'சோழ வளநாடு சோறுடைத்து' என்று சொல்லி மகிழாத அறிஞரில்லை இத்தமிழகத்தில். ஆனால் அந்தச் சோறுடைய சோழ வளநாட்டிலேதான், உண்பதற்கு ஒரு கவளம் சோறும் இல்லாமற்போன காரணத்தால், தங்கள் குழந்தைகளை, பிள்ளையோ பிள்ளை என்று கூறி, பெற்றோர்கள், வீதியிலே கொண்டு வந்து விற்கும் வேதனைக் காட்சிகள் உருவாகியிருக்கின்றன.

"வந்தார்க்கு இலையும், வருவார்க்கு உலையும்" என்று அருமையானதோர் பழமொழியே வழங்கும் அளவுக்கு விருந்தோம்பல் பண்பிலே வளர்ந்தோங்கியிருந்த வளமார் திராவிடப் பொன்நாடுதான் இது! ஆனால் இந்த வளமார் திராவிடப் பொன்னாட்டிலேதான், பச்சிளங் குழந்தைகளும், பசி பசி எனப் பதறியழுது துடிதுடிக்கும் பெருங் கொடுமையை நாம் நம் கண்ணால் கண்டு இதயத்தால் கண்ணீர் உகுக்க வேண்டிய நிலைமை நேரிட்டிருக்கிறது.

விருந்தே யாயினும் மருந்தோடு உண் என்று மூதறிஞர் பலரால் முதுமொழி அளிக்கப்பட்ட முத்தமிழ் நன்னாடுதான் நம் தென்னாடு, ஆனால் இந்த எழில் நாடுதான் இன்று, ஆறு அவுன்ஸ் அரிசிக்கும் ஏங்கித் தவிக்கும் ஏழை நாடாக ஆக்கப்பட்டிருக்கிறது.

தென்னாட்டு மக்கள் தம் இதய வீட்டிலே, இதுபோது, இன்பம் எனும் எழில்மாது பவனி வரவில்லை. துன்பம் எனும் தீயோன்தான் திருட்டுவிழி விழித்தபடி இருக்கிறான்.

அவர்களுடைய முகத்திலே, புதுவாழ்வு, பூரிப்பு, புன்னகை — இவை ததும்பவில்லை. வேதனை, வாட்டம், வருத்தம்—இவைதான் சதிராடுகின்றன.

அவர்களுடைய கண்களிலே களிப்பு ஒளி கூத்தாடவில்லை. சஞ்சல சந்தடிதான் சலசலப்புச் செய்தபடி இருக்கிறது.

அவர்களுடைய உதடுகளிலே, 'வாழப்பிறந்தோம் நாம்—ஆகவே வாழ்கிறோம் வளமாக' என்ற எழிலான மொழிகள் எழுந்திடவில்லை. "ஏன் பிறந்தோம் இவ்வுலகில்—பட்டினி பட்டினி என்று பகலும் இரவும் ஓயாமல் கூறிக்கூறி ஓய்ந்து ஒழிய ஏன் பிறந்தோம்?" என்ற ஏக்க மொழிகள்தான் எக்காளமிடுகின்றன.

சேரனின் சொந்தக்காரர்கள், சோழனின் கால்வழியினர், பாண்டியன் பரம்பரை என்றெல்லாம் முத்தமிழிலே வரலாற்றைத் தோய்த்தெடுத்துக் கூறத் தோன்றாது அவர்களைக் கண்டால்! பாலைவனப் பிரதேசத்தினரோ, சகாரா பூமியினரோ, வயல்காணா வட்டாரத்தவரோ என்றுதான் இயம்பத் தோன்றும்—அத்தகு சோக சித்திரங்களாகத்தான் அவர்கள் உலவுகின்றனர்.

வேதனையின் வடிவம், துயரத்தின் சின்னம், சஞ்சல சொரூபம், கண்ணீரின் காட்சி, உடைந்த உள்ளம்— இந்த வாசகங்களிலே, எந்த வாசகத்தைக் கூறினாலும் சரி, அது, அவர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். அவ்வளவு சோகமும் சஞ்சலமும் நிரம்பியது அவர்களுடைய இன்றைய வாழ்வு.

நகரங்களிலே வாழ்பவர்கள் அல்ல அவர்கள்! நாட்டுப்புறங்களிலே வசிப்பவர்கள்! வசிப்பவர்கள் என்று கூறுவது பொய்யுரைப்பதாகத்தான் ஆகும். வதைபவர்கள் என்று வேண்டுமானால் கூறலாம். பொருத்தமானதாக இருக்கும். நாட்டுப்புறங்களிலே வதைபவர்கள் அவர்கள்! ஆம், அதுதான் உண்மை!

நகரங்களிலே வாழும் நிலைமையை எப்படியோ பெற்றுவிட்டவர்களை அரிசிக் கவலை அவ்வளவாக அண்டுவதில்லை. ஆறு அவுன்ஸ்தான் அளந்து கொடுக்கிறார்கள் ஆட்சியாளர்கள் என்ற போதிலும், அந்த ஆறு அவுன்ஸ் அரிசி நாள்தோறும் நிச்சயமாகக் கிடைத்துவருகிறது நகரவாசிகளுக்கு! நகரங்களிலே, பங்கீட்டு அளவுப்படி, நாள்தோறும் அரிசி நல்லமுறையிலே தரப்படாவிட்டால் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் —கண்டன முழக்கங்கள் எழும்—பட்டினி ஊர்வலங்கள் நடைபெறும்--பத்திரிகைகளிலே, சேதி, பத்திபத்தியாக வெளிவரும்—தீப் பொறி பறக்கும் நடையிலே தினத் தாள்கள் தலையங்கங்கள் தீட்டும் — ஆட்சியாளரின் ஆற்றலின்மை அகில உலகிலும் ஒலிபரப்பப்பட்டுவிடும். நகரங்களிலே பெரிய பெரிய அதிகாரிகள் வாழ்கிறார்கள், வழக்கறிஞர்கள் உலவுகிறார்கள், டாக்டர்கள்நடமாடுகிறார்கள், பொறிஇயல்வல்லுநர்கள்பவனிவருகிறார்கள், உரத்த குரலிலே ஊராளவந்தவர்களை நோக்கி உருட்டிமிரட்டிப் பேசக்கூடிய வசதியும் வாய்ப்பும் செல்வமும் செல்வாக்கும் படைத்தவர்கள் அவர்களெல்லாம்! அவர்களுக்கெல்லாம், அரிசி, அளவுப்படி அளிக்கப்படாவிட்டால், பங்கீடு முறை பங்கமேதுமின்றி நடைபெறாவிட்டால், ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் அவர்களுக்கு ஊட்டும் முறையிலே காரியங்கள் நடந்துவிட்டால், மேதினி அதிர முழக்கம் எழுப்புவர் அன்னார். அறிவர் இதனை ஆட்சியாளர்கள் எனவேதான் நகரங்களிலே, பங்கீடு, ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

ஒருக்கால் பங்கீடு ஒழுங்காக நடைபெறாவிட்டால்கூட, நகரவாசிகளால், நிலைமையைச் சமாளித்துக்கொள்ளமுடியும். உணவு விடுதிகள் இருக்கின்றன வீதியிலே—தேவையான பணம் இருக்கிறது அவர்கள் சட்டையிலே—எனவே நிலைமை நேராகிவிடும் நினைத்த நேரத்தில்! நேராக்கிக் கொள்ள முடியும் அவர்களால்!

நகரத்தில் வாழ்பவர்கட்கு அரிசிக் கவலை அணுவளவும் கிடையாது என்பதல்ல நாம் கூறவருவது! தேவையான அளவு அரிசி அகப்படாக் காரணத்தால் அல்லல் அவர்களுக்கும் அதிகமான அளவு ஏற்படத்தான்செய்கிறது,வேதனை அவர்களுக்கும் இருக்கத்தான் செய்கிறது—இரு வேளை அரிசி உணவு உட்கொண்டிருந்தவர்களிலே, பலர், இப்போது, ஒரு வேளைதான் உண்ணமுடிகிறது— மற்ற வேளையில் கோதுமையோ சோளமோ எது கிடைக்கிறதோ அதைக் கொண்டுதான் பொழுதை எப்படியோ ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள்—எனவே அவர்கட்கு அரிசிக் கவலை அடியோடு கிடையாது என்று யாரும் கூறமுடியாது—நாமும் கூறவில்லை--நாம் கூறவதெல்லாம், அவர்கட்கிருப்பதைவிட, அரிசிக் கவலை, கிராமவாசிகட்கு ஆயிரம்மடங்கு அதிகம்என்பதுதான்.

கிராமவாசி,கண்டனக்குரல் எழுப்பும் வகையும் முறையும் அறியான்—அவனுடைய உள்ளக் குமுறலை ஊராள வந்தவர்கட்கு அழுத்தந்திருத்தமாக அறிவிப்பதெப்படி என்பது அவனுக்குத் தெரியாது—பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், பத்திரிகைக் கட்டுரைகள் இவற்றின் மகிமை எவ்வளவு என்பதையும் அவனால் எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை—அவனுடைய பரிதாப நிலைமையை அவனாக அறிவித்துக்கொள்ள அவனுக்குத் தெரியாதிருக்கும் காரணத்தால், அது, தானாக ஊர்ந்து ஊர்ந்து தொலை தூரத்தில் உள்ள நகரங்களை எட்டிப் பிடித்து, அங்குள்ள பத்திரிகாலயங்களில் நுழைவதற்கு நெடுங்காலம் பிடிக்கிறது—எனவேதான், கிராமவாசியின் அரிசி அல்லலைக் குறித்து ஆட்சியாளர்கள் ஏனோதானோ என்ற போக்கிலே நடந்து கொள்கிறார்கள்— பொதுமக்களுக்கும் அந்தப் பிரச்சினை குறித்து நியாயமாகத் தெரிந்திருக்க வேண்டிய அளவு, தெரியாமல் இருக்கிறது.

கள்ளச் சந்தை நோக்கிக் கடும் வேகப் பயணம்!

வெளியே தெரியவில்லையே தவிர, உள்ளபடியே இதுபோது, கிராமவாசியின் வாழ்க்கை, வறுமைத் தேளால் கொட்டப்பட்டு, வேதனை நச்சரவால வளைக்கப்பட்டு, அரிசிப பஞ்சம் எனும் சம்மட்டி அடியால் நொறுக்கப்பட்டு, பசிப்பிணி என்னும் பாழுங் கிணற்றிலே தள்ளப்பட்டதாகத்தான் இருக்கிறது. கிராமங்கட்குச் சென்றால் கண்ணுடையோர் எவரும் காணக்கூடிய உண்மையே இது.

பல கிராமங்களிலே, பங்கீட்டுக் கடைகள் திறக்கப்படுவதே இல்லை,

சில கிராமங்களிலே, கடைகள் திறக்கப்படுகின்றன—ஆனால் கடைகளிலே, உணவுப் பொருள்கள் இருப்பதில்லை. கோட்டானும் துறிஞ்சிலும் வௌவாலும் அதன் இனமும்தான் கூடாரம் அடித்துக் கொண்டிருக்கின்றன.

சில இடங்களிலே—ஆச்சரியம்! ஆச்சரியம்!—கடைகளிலே உணவுப் பொருள்கள் உண்மையாகவே இருக்கத்தான் செய்கின்றன, ஆனால் அவை அரிசியோ அரிசி என்று அலறித் துடிக்கும் ஏழை மக்களின் ஏந்திய கரங்களை வந்தடைவதில்லை. பின்புறக் கதவைத் திறந்து கொண்டு, திருட்டு வழியாக இருட்டு நேரத்தில், கள்ளச் சந்தை நோக்கிக் கடும்வேகத்தில், புனிதபுரிப் பயணம் புரியத் தொடங்கிவிடுகின்றன.

சிற்சில இடங்களில்தான் பங்கீட்டுக் கடைகள் திறக்கப்பட்டு, அவற்றிலே உணவுப் பொருள்களும் இருந்து, அந்த உணவுப் பொருள்கள் ஊர் மக்கட்கு வழங்கப்படும் உன்னத காரியம் நிகழவும் செய்கிறது. ஆனால் அத்தகு இடங்களிலே வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் அரிசிதான் தரப்படுகிறது. மிச்சமுள்ள நாட்களில் மக்களின் கதி என்னாவது என்று கேட்கிறீர்களா? என்ன ஆவது என்று யாரைக் கேட்க முடியும் கிராமவாசிகள்—போய்ப் பார்க்கிறார்கள் கடைகளை—கடைகள் மூடியவை மூடியபடி இருக்கின்றன—வேதனை நிரம்பிய உள்ளம், குளமாக இருக்கும் கண்களை, அரிசி காணாது தவிக்கும் கரங்களைக் கொண்டு, கண்களே கலங்காதீர் என்று சமாதானம் சொல்லவைக்கின்றது—வீடு திரும்புகின்றனர் கிராமவாசிகள்—பிண்ணாக்கோ, புளியங்கொட்டையோ, கத்தாழைக் கிழங்கோ, புளியந் துளிரோ—கிடைத்ததை எடுத்து உண்கிறார்கள்—பலவகை நோய்களின் இருப்பிடங்கள் ஆகிறார்கள்—இதுதான் நடக்கிறது கிராமங்களில் — வேறென்ன நடக்கும் — கிராமவாசிகள் தானே அவர்கள்—அவர்களிடம் என்ன ஒலி பெருக்கியும் மேடையுமா இருக்கின்றன ஆட்சியாளர்களின் இந்த அலட்சியப் போக்கை அலசிக் காட்டி அவனிக்கெல்லாம் எட்டும்விதத்தில் அதிர்வேட்டுக் கிளப்ப!

வாரத்திலே ஒருநாள் அல்லது இரு நாள் கிடைக்கிறதே அரிசி, அந்தப் பங்கீட்டு அரிசியாவது நல்ல அரிசியாக, உண்பதற்கு ஏற்ற உயர்வு படைத்ததாக இருக்கிறதா—அதுவும் இல்லை! கிடைக்கும் அரிசியிலே பெரும்பகுதி புழுத்துப் போய் நாற்றம் அடிக்கும் நிலையிலேதான் இருக்கிறதாம்! அந்த அரிசியிலேயும் பெரும்பகுதி கல்லும் மண்ணும் உமியும் தவிடும் கலந்த கதம்பமாம்—வெறும் அரிசி மட்டும் அல்லவாம்!

நினைத்துப் பாருங்கள் ஒரு கணநேரம் கிராமவாசியின் நிலையை—உள்ளம், கடுங்கோபம் கக்கும் எரிமலையாகும். கண்கள், நீர் பொழியும் கார்மேகங்களாகும். நரம்புகள் துடிக்கும்—குருதி கொதிக்கும். எண்ணிப் பார்ப்பவர் எவரானாலும்—அவர், உணவு அமைச்சராக இருக்கும் 'உத்தமர்' ரோச் விக்டோரியாவாக இருந்தாலும் சரியே, அல்லது வீரத் திராவிட இயக்கத்துடன் அல்லும் பகலும் மல்லுக்கு நிற்கும் 'மாவீரர்' காமராஜரானாலும் சரியே—அவருடைய நெஞ்சு நெகிழ்ந்து நெக்குருகாமல் இராது; அவருடைய கண்கள் கசிந்து கண்ணீர் மல்காமல் இராது. அவ்வளவு கொடுமை நிறைந்த கோர சித்திரம், இன்றைய கிராமவாசியின் உணவுநிலைமை!

கடைகள் திறந்திருக்காது—திறந்திருந்தாலோ, உணவிருக்காது—ஒருக்கால் உணவு இருந்தாலும் அது கள்ளச் சந்தை நோக்கித்தான் வெள்ளமெனப் பாயுமேதவிர மக்கள் மன்றம் நோக்கி எக்களிப்புடன் வாராது—ஒரு வேளை தப்பித்தவறி வந்துவிட்டாலும், அப்படி வந்து சேரும் அரிசியின் அளவு ஒரு நாள் உணவுக் கவலையைத்தான் ஒழிக்கும் தன்மை படைத்ததாக இருக்குமே தவிர ஏழுநாள் ஏக்கத்தையும் போக்கும் மாமருந்தாக இருக்காது—அதுமட்டுமல்ல, அப்படி வந்து சேரும் சிறு அளவு அரிசிகூட பெயரளவுக்குத்தான அரிசியாகஇருக்கும், உண்மையில் பாதி, கல்லும் மண்ணும் என்ற பெயர்படைத்த பொருளாகத்தான் இருக்கும்.

இதுதான் கிராமவாசியின் வாழ்க்கை! வாழ்க்கையா இது? அல்ல அல்ல! நடமாடும் மரணம்!

நாடாள வந்திருக்கும் நல்லறிவாளர்களுக்குப் பெருமையும் பூரிப்பும் தரும் நிலைமையா இது?

அசல் பாரத புத்திரர் தரும் அழகான நற்சாட்சி!

பதில் கூறவேண்டுகிறோம் பகுத்தறிவாளர்களைப் பார்த்துச் சீறியெழுந்து சினங்கொண்டு பதைபதைக்கும் சிவஞானங்களே—செங்கல்வராயர்களே!

திராவிட இயக்கத்தைத் தாக்குவதிலே தங்கள் பலம் முழுவதையும் செலவிடப்போகிறார்களாம் செங்கல்வராய சிவஞானங்கள்! செலவிடட்டும் செலவிடட்டும் — வேண்டாம் என்று நாம் கூறவில்லை — அவர்கள் தாக்குதலாலே தகர்ந்துவிடும் அளவு பலவீனம் பொருந்தியதல்ல திராவிட இயக்கம் — அல்லது திராவிட இயக்கத்தைத் தாக்குவதற்குத் தேவையான அளவு பலம் படைத்தவர்களுமல்ல அப்பாரத புத்திரர்கள்—மலையுடன் மோதினால் மண்டைதான் உடைபடும்—மலை உடைபடாது—இது நமக்கு நன்றாகத் தெரியும்—தெரிந்ததால்தான் கூறுகிறோம், திராவிட இயக்கத்துடன் மோதிக்கொள்ளவேண்டுமென்பது அம் "மாபெருந்தலைவர்க"ளின் (!) மகத்தான விருப்பமானால் தாராளமாக அதைச் செய்துபார்க்கட்டும்—ஆனால் அப்படிச் செய்வதற்கு முன்னால், உணவுப் பிரச்சினையிலே ஊராளவந்தவர்கள் காட்டிவரும் உதவாக்கரைப் போக்குகண்டு ஊரெல்லாம் கைகொட்டிச் சிரிக்கிறதே, அந்தக் கேலிச் சிரிப்புக்கு முன்னால் இந்த வீராதி வீரர்களின் வறட்டுக் கூச்சல் எதிர்த்துச் சென்று முன்னேற முடியாது—அதை மட்டும் இவர்கள் சிறிது நினைவில் நிறுத்திக்கொள்ளட்டும்.

"உணவுப் பிரச்சினை உண்மையில் உள்ளத்தை உருகவைக்கும் நிலையினதாக இல்லை—இதெல்லாம் இந்த சூனாமானாக்களின் விஷமப் பிரசாரம்!" என்று கூறித் தப்பித்துக்கொள்ள முயலலாம் செங்கல்வராய சிவஞான பெரிய சிறிய அண்ணாமலையார்கள்! முயலலாம் என்று கூறி நிறுத்துவானேன்—நிச்சயம் முயன்றுதான் பார்ப்பார்கள்—ஆனால் முன்கூட்டியே அவர்கட்கு முழு அன்புடன் அறிவித்துவிட ஆசைப்படுகிறோம், அந்த முயற்சி அணுவளவும் பலிக்காது

ஸ்ரீஜத் இராஜாராம்—திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரல்ல—திராவிடர் கழகத் தளபதியுமல்ல—அசல் பாரத புத்திரர்! பாரதபுத்திரர் என்பது மட்டுமல்ல, ஊராட்சி மண்டபத்திலே உலவிடும் உயர்வு படைத்தவர்! எம். எல். ஏ! மந்திரிசபையினருக்கு மிகவும் வேண்டியவர்!

அவர் கூறுகிறார்:—"நவம்பர் 11 முதல் 18 வரை உள்ள ஒரு வாரத்தில், திருமங்கலம் தாலுகாவில், அந்த வாரம் முழுமைக்குமாகச் சேர்த்து மூன்று அவுன்ஸ் அரிசியும், இரண்டு அவுன்ஸ் ஏனைய உணவுப் பொருள்களும்தான் தரப்பட்டுள்ளன. அதற்கு முந்திய வாரத்தில், ஒருவருக்குக்கூட, சிறிதளவு உணவுப் பொருள்கூட தரப்படவில்லை. நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. பட்டினி, திருமங்கலம் தாலுகாவில் பவனி வந்தபடி இருக்கிறது."

கூறுபவர் தேசத்துரோகி அல்ல—இராஜாராம்! பாழாய்ப்போன வகுப்புத் துவேஷி அல்ல—பாரததேவியின் பேரருளுக்குப் பாத்திரமான புனித மூர்த்தி! அவர்தான் கூறுகிறார், ஒரு வாரத்தில அரிசியே தரப்படவில்லை, மற்றொரு வாரத்திலோ மூன்று அவுன்ஸ்தான் தரப்பட்டதென்று!

வாரம் முழுவதும் வயிறார உண்ணவேண்டுமானால் ஒரு மனிதனுக்கு ஒரு வாரத்திற்குத் தேவைப்படும் அரிசியின் அளவு 112 அவுன்ஸ்

ஆட்சியாளர்கள் இப்போது வகுத்துள்ள பங்கீட்டு அளவுப்படி, ஒரு வாரத்தில் ஒரு மனிதனுக்குக் கிடைக்கவேண்டிய அரிசியின் அளவு 42 அவுன்ஸ்!

ஆனால், திருமங்கலம் தாலுகாவில், ஒரு வாரத்தில் ஒரு மனிதனுக்குக் கிடைத்த அரிசியின் அளவு—கவனமாகப் படியுங்கள்—3 அவுன்ஸ்! மற்றோர் வாரத்தில், அதே தாலுகாவில், அந்த அளவுகூட கிடைக்கவில்லை—பங்கீட்டுக் கடைகளே திறக்கப்படவில்லை—இதுதான் இன்றைய உணவு நிலை—கூறுபவர் இராஜாராம்!—தேசியவாதி!

கிடைக்கவேண்டியது 112 அவுன்ஸ்!

ஆனால்,

கிடைத்திருப்பது, ஒரு வாரத்தில், 3 அவுன்ஸ்!

மற்றோர் வாரத்தில், 0 அவுன்ஸ்!

இதற்குப் பெயர்தான் இராமராஜ்யமாம்—இந்த இராமராஜ்யம்தான் இனியும் நீடித்து இருக்க வேண்டுமாம்—அப்படி இருப்பதற்காக நாமெல்லாம் நம்முடைய ஓட்டுகளை வர இருக்கும் தேர்தலில், அள்ளிக் கொடுக்க வேண்டுமாம் ஆட்சியாளர்தம் கட்சிக்கு—அச்சம் சிறிதுமின்றி ஆணத்தத்துடன் பேசுகிறார்கள் காமராஜர்கள் இதுபோல—பொதுமக்களே, நீங்களே கூறுங்கள்—கிடைக்கவேண்டியது 112 அவுன்ஸ், ஆனால் கிடைத்து வருவது 3 அவுன்ஸ், இதை நினைவில் நிறுத்திக்கொண்டு, கூறுங்கள்—இந்த இராம

இனியும் நீடித்தால் இராமராஜ்யம், எப்படி வாழும் நம் நாடு?

ராஜ்யம் இனியும் நீடிக்கவேண்டுமா—நீடிக்கவிடலாமா—விட்டால் நாடு, வாழுமா?

*   *   *

"ஆட்சியாளர்கள் அடிக்கடி வெளியிடுகிற அறிக்கைகளையும், சட்டமன்றங்களில் அமைச்சர்கள் அவ்வப்போது தெரிவிக்கிற கருத்துக்களையும் கூர்ந்து கவனிக்கும்போது, கிராமப் பகுதிகளில் நடமாடும் உணவுப் பஞ்சத்தைப் பற்றி ஆட்சியாளர்களுக்கு ஒன்றுமே தெரியாதோ என்றுதான் ஐயுறவேண்டியிருக்கிறது.

"எனவே சென்னைக்கு அருகே உள்ள தாம்பரம் பகுதியில் வாழும் நாங்கள், இங்கே உள்ள உணவு நிலைமையை ஆட்சியாளர்கட்கு எடுத்துக் காட்ட வேண்டியது எங்கள் க மையாகிறது.

"வேறு பல பிரச்சினைகளிலே, எங்கள் நிலை, சென்னை நகரவாசிகளின் நிலையை ஒத்ததாக இருந்தாலும், உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, எங்கள் நிலை, எல்லாக் கிராமங்களிலும் உள்ள நிலையைத்தான் ஒத்திருக்கிறது.

"சென்ற நான்கு வார காலமாக, இங்குள்ள பங்கீட்டுக் கடைகள், வாரத்தில் ஒரு நாளைக்கு, அல்லது அதிகம் போனால், இரண்டு நாளைக்குத்தான் பங்கீட்டு உணவுப் பொருளை எங்கட்குத் தந்திருக்கின்றன.

"ஒரு வாரம், உணவுப் பொருளே எங்கட்குத் தரப்படவில்லை.

"எப்போதோ ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்குக் கிடைக்கிற உணவுப் பொருள்கூட எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

"இங்குள்ள பங்கீட்டுக் கடைகளுக்கு, ஒரு வார காலத்திற்கென்று குறிப்பிடப்பட்டு, இங்கு வந்து சேர்கின்ற உணவுப் பொருள், அது வந்து சேர்கின்ற அந்த ஒரு நாளைக்குக்கூடப் போதுமான அளவினதாக இல்லை.

'இப்படிக் கிடைக்கிற சின்னஞ்சிறு அளவு பங்கீட்டரிசியைப் பெறுவதற்குக்கூட, ஆறுமணி நேரம் காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறது.

"பணவசதி உள்ளவர்கள், இப்படிக் காத்துக் கிடந்து பங்கீட்டரிசியைப் பெறுவதற்கென்றே ஒரு வேலைக்காரனை நியமித்துவிடுகிறார்கள். அத்தகு வசதி வாய்க்கப்பெறாதவர்கள், தங்கள் அலுவலகம் அல்லது தொழிற்சாலையிலிருந்து வாரந்தோறும் ஒவ்வொரு நாள் விடுமுறை பெற்றுக்கொண்டு இந்தப் பணியினைப் புரிந்திடவேண்டியவர்கள் ஆகிறார்கள்.

"இந்தவிதமாக இங்குள்ள ஒவ்வொருவரும் தங்கள் மாத ஊதியத்தில் நான்கு நாளுக்கு உரிய தொகையை வீணாக இழந்துவருகிறார்கள்.

"சிலர், இதுபோலத் தங்கள் ஊதியத்தை இழக்கவிரும்பாமல், ஆறுமணி நேரம் காத்துக் கிடந்தால் மட்டுமே அவர்கள் பெறக்கூடிய பங்கீட்டரிசியை இழந்துவிடுகிறார்கள். இப்படி வாரந்தோறும் பங்கீட்டரிசியை இழந்துவிடுபவர்கள் தொகை ஏறத்தாழ 200 இருக்கும்.

"வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள், அவர்கள் எவ்வளவுதான் கள்ளச் சந்தை வாணிபத்தை வெறுப்பவர்களாக இருந்தாலும் சரி, அங்கேதான் சென்று தங்கள் உணவுப் பொருளை வாங்கியாகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. கள்ளச் சந்தையில் அரிசி வாங்குகிற அளவுக்குப் பணவசதி இல்லாதவர்கள் என்ன செய்கிறார்கள் என்கிறீர்களா? அவர்களுக்குத்தான் இருக்கவே இருக்கிறது வாரத்தில் ஆறுநாட்களோ அல்லது அதற்கு மேலுமோ பட்டினி இருக்கிற சுதந்தரம்!"

தாம்பரம்—சென்னையிலிருந்து 16-கல் தொலைவில் உள்ள ஒரு வட்டாரம். அங்கேதான் கல்நெஞ்சையும் கரைய வைக்கும் இத்தகு கொடுமைகள் நிகழ்ந்தபடி இருக்கின்றன.

இந்த உண்மைகளை இவ்வளவு திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்து விளக்கியிருப்பவர்கள், "எங்கோ கிடந்ததுகள்" அல்லர்! "ஏதும் தெரியாததுகள்" அல்லர்! "வேறு வேலை அற்றதுகளு"மல்லர்! ஆட்சியாளர்களைத் தாக்கியே தீரவேண்டிய நிலையிலோ பொறுப்பிலோ இருப்பவர்களுமல்லர்!

டாக்டர் எஸ் வி. அநந்தகிருஷ்ணன்—தாம்பரம் கிறித்தவக் கல்லூரியின், இரசாயன நூல் பேராசிரியர்!

புலவர் பி. ஆலால சுந்தரம்—அதே கல்லூரியில், தமிழ் விரிவுரையாளர்,

வி. டி. வர்கீஸ்—அந்தக் கல்லூரியின் மற்றொரு பேராசிரியர்.

சந்திரன் தேவநேசன்—கிராமத் தொண்டர்கள் கழகத் தலைவர், அந்தக் கல்லூரியின் இன்னொரு விரிவுரையாளர்.

ஜி. இராஜகோபால் நாயுடு — சென்னை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அலுவலகத்தின் முன்னாள் தலைமை அலுவலர்.

பி. கிருஷ்ணன்—சென்னை செக்ரிடேரியட்டின் முன்னாள் துணைச் செயலாளர்.

இவர்கள் ஒவ்வொருவரும் கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்த கனவான்கள். ஆட்சியா

(7-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைச் சித்திரம் :

டாக்டர் லார்சன்— தொழிலாளர்களின் தோழன்

[தெ. பா. சம்பந்தன்]

"அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே, 'ஹவையன் கரும்புப் பயிரிடுவோர் சங்கத்'தின் சார்பில் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் எனக்குப் பேச வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளேன். தற்போது அறிவியல் எந்த அளவிற்கு வளர்ந்துள்ளது என்பதைப்பற்றி நான் பேசுவேன் என்று உங்களில் பலபேர் எதிர்பார்க்கலாம். அது இயற்கையும் கூட. ஆனால் உங்கள் எல்லோரையும் நான் ஏமாற்றவேண்டி இருக்கிறது. என் செய்வது? உங்கள் கரும்புத் தோட்டங்களை நான் பார்வையிட்டபோது அவற்றின் வளமும், வனப்பும், வளர்ச்சியும் என்னை வியப்புக்குள்ளாக்கி விட்டன. ஆனால் தோட்டத்தை விட்டு வெளியே வரும்போது என் வியப்பு வேதனையாக மாறிவிட்டது. இனிமை பொருந்திய இக் கரும்புக் கழிகளைப் பயிரிடும் தொழிலாளித் தோழர்கள் வாழ்க்கை கசக்கும் கனியாக இருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். இந்தச் சங்கடமான நேரத்தில் வேதனையைத் துடைக்கும் மார்க்கத்தை நான் உங்களுக்குக் காட்டாது விஞ்ஞான விசித்திரங்களைப் பற்றிப் பேசுவது பொருத்தமானதல்ல என்பது மட்டுமல்ல, மன்னிக்க முடியாத தவறும் ஆகும்"

"டாக்டர் லார்சன், உம்மை நாங்கள் இங்கே அழைத்தது, டாக்டராயிற்றே, ஏதேனும் பயனுள்ள காரியங்களைப் பற்றி எடுத்துக் கூறுவீர் என்ற எண்ணத்தால்தான். தொழிலாளர் நிலைபற்றி உமக்கு ஒரு முறை அழவேண்டும் போலிருந்தால் அதை வீட்டிலே வைத்துக் கொள்ளுங்கள். இங்கே வேண்டாம்."

"நண்பரே, அவசரப்படாதீர்! கரும்புகள் நன்றாகவும், நிறையவும் பயிராவதில் உமக்கு எவ்வளவு ஆசையும், அக்கறையும் இருக்கிறதோ, அந்த அளவிற்கு எனக்கும் இருக்கிறது. உங்களுடைய அறிவியல் ஆட்சியாளர்கள் எந்த எந்த முறைகளைக் கையாண்டால் பயிர்களின் தரத்தை உயர்த்த முடிகம் என்பதை மட்டுமே உங்களுக்கு 'எடுத்துக் கூறுகிறார்கள். பயிர்கள் வளமுள்ளதாக இருக்கவேண்டுமானால் பயிரிடுவோன் வாழ்க்கையும் வளமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் உங்களுக்குக் கூற மறந்து விட்டார்கள். எனவே அவர்கள் மறந்ததை நான் செய்து முடிக்க முன் வந்தேன். நோயுள்ள ஒருவன் இன்றைக் கெல்லாம் அறுத்தால் எத்தனைக் கருப்புகளை அறுக்கமுடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நோயாளி மனைவியைப் பற்றியும், சாவுக்கும் வாழ்விற்கும் இடையே ஊசலாடும் குழந்தையைப்பற்றியும் நினைத்து சஞ்சலப் படும் ஒரு தொழிலாளியின் வேலை 'கச்சிதமாக' எப்படி இருக்க முடியும்? அவன் கள்ளங் கபடற்ற உள்ளமுள்ளவனாக, வஞ்சகமற்ற மனமுடையவனாக இருக்கலாம். ஆனால் அவன் உள்ளத்தில் வேதனை குடிபுகுந்தால் வேலை எப்படி 'சுத்தமாக' இருக்கும்? எனவே நான் 18 மாதத் திட்டம் ஒன்று தருகிறேன். அதைக் கையாண்டு பாருங்கள். 18 மாதங்களுக்குப் பின் உங்கள் வர்த்தகம் வளம் குன்றிப் போனால் நான் என் காதை அறுத்துக் கொள்ளுகிறேன்!"

கூட்டத்தில் ஒரே கைதட்டல். கோபத்தால் குறுக்கிட்டுப் பேசினவன் அடுத்த கணத்தில் ஓடோடியும் சென்று டாக்டரின் கையைப் பற்றிக் குலுக்கினான். டாக்டர் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

* * *

நில்ஸ் பால் லார்சன் என்ற பெயரைக் கொண்ட அந்த டாக்டர் ஸ்வீடனில் பிறந்த ஓர் அமெரிக்கராவர். ஹவாயில் அவர் 20 ஆண்டுகள் விடா முயற்சியோடு குழந்தைகளின் அகால மரணத்தைத் தடுக்க கடும்போர் தொடுத்தார். மரண வேகத்தை மட்டுப்படுத்த முனைவது அவ்வளவு சுலபமான வேலையல்ல. உணராதவர் அல்ல அவர். ஆனாலும் முயன்றார். வெற்றியும் பெற்றார்.

கார்னலில் மருத்துவக் கல்வி பயின்ற லார்சன் விரைவில் தம் புத்தி கூர்மையால் அமெரிக்க மருத்துவக் குழுவின் முக்கிய மனிதரானார். பின்பு அவர் ஹனலுலு என்ற இடத்திள்ள "அரசி

யார் ஆஸ்பத்திரி"யின் நிர்வாகியானார். தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களை அவர் அனாவசியமாகச் செலவழிப்பதில்லை. ஹவாயின் இயற்கைக் காட்சிகளில் மனம் பறிகொடுத்த லார்சன் கையில் காமிராவுடன் மலைகளிலும், காடுகளிலும் சுற்றி அலைந்து திரிந்தார். அப்போது ஹவாய் தொழிலாளிகளின் மோசமான நிலை அவர் கண்ணில் பட்டது.

ஆண்டு தோறும் 100,000 பேரில் 45 பேர், பெரிபெரி என்ற வியாதியால் இறந்து போயினர்.

வயிற்று சம்பந்தப் பட்ட ஓர் வியாதியால் ஆயிரக் கணக்கான உயிர்கள் அழிந்தன.

ஆகாரக் குறைவின் காரணமாக இரண்டாண்டு கூட நிரம்பாத பச்சிளங் குழந்தைகள் 600க்கு மேல் ஆண்டுதோறும் இறந்தன.

100 000க்கு 800 பேர்வீதம் தொழிலாளர்கள் எலும்புருக்கி நோயால் ஆண்டுதோறும் அவதிப்பட்டனர். இதையெல்லாம் கண்ட டாக்டர் லார்சன் உள்ளம் வாடிற்று.

இந்த நேரத்தில்தான் 'ஹவாயன் கரும்புப் பயிரிடுவோர் சங்கத்'தின் ஆண்டு விழாவில் அவர் பேச அழைக்கப் பட்டார். வேதனையால் வாடியிருந்த அவர் உள்ளத்திற்கு இந்த அழைப்பு ஆறுதல் அளித்தது. தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தார்

பழத்தைக் கசக்கிப் பிழிந்தால் இனிய சாறு வரும்.

பாம்பைக் கசக்கிப் பிழிந்தால் இரத்தம் வரும்,

ஆனால் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்தால் செல்வம் குவியும் என்ற பாடத்தை மட்டுமே படித்துவைத்திருந்த முதலாளிமார்கள் நிறைந்த அந்தக் கூட்டத்தில், கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டது போன்ற நிகழ்ச்சி நிகழ்ந்தது. ஆனால் டாக்டர் லார்சன் தம்முடைய நாவன்மையால் அம் முதலாளிமார்களின் ஆதரவைத் தன் திட்டத்திற்குத் தேடிக்கொண்டார்.

டாக்டர் லார்சன், தாய்மார்கள், குழந்தைகளின் சாவுப் பட்டியலைத் தருவித்து அதை நிதானமாக ஆராய்ந்தார். மரணப் பட்டியல் நீளுவது தாய்மார்கள் அடிக்கடி கருத்தரிக்கும் காரணத்தால்தான் என்ற உண்மையைக் கண்ட லார்சன் கருத்தரிப்பைக் கட்டுப்படுத்துவதுதான் மரணப்பட்டியலைச் சுருக்கும் ஒரே மார்க்கம் என்று உணர்ந்தார். இக் கருத்தை அவர் வெளியிட்டபோது மனிதாபிமானத்தை 'மூட்டை கட்டிப் போட்டுவிட்ட' மத அபிமானிகள் மருண்டனர்.

"குழந்தை பிறப்பது ஆண்டவனின் அனுக்கிரகத்தால். எனவே கருத்தரித்தலைக் கட்டுப் படுத்த முயலுவது ஆண்டவன் ஆணையை அலட்சியப் படுத்தும் அடாத செயலாகும். சிறுவர்கள் நீங்கள். உங்களால் இதையெல்லாம் புரிந்துகொள்ள முடியாது. வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு. இதனால் உலகத்துக்கே நாசம்தான் சம்பவிக்கும்"—மதவாதிகள் பதைபதைத்தனர். இதையெல்லாம் காண லார்சனுக்குச் சிரிப்புதான் பொங்கி வந்தது.

"இரண்டாண்டுக்கொருமுறை ஆரோக்கியமுள்ள குழந்தை உங்களுக்கு வேண்டாம். ஆண்டுக்கொருமுறை பலவீனமான குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருங்கள் என்று—அடிக்கடிக் கருவுற்று மெலிந்து போன—தாய்மாரைப்பார்த்துக் கூறுகிற அளவிற்கு அந்த ஆண்டவன் என்ன அத்தனை ஈவிரக்கமற்றவனா?" என்று கேட்டார் டாக்டர். மதவாதிகள் பதில் கூறவில்லை. ஆனால் முணுமுணுத்தனர். வீட்டுக்கு வீடு ஒரே மாதிரியாக உள்ள வாயிற்படிகளைப்போல, நாட்டுக்கு நாடு மதவாதிகளும் ஒரே நிலையும் நினைப்பும் கொண்டவர்கள்தான் போலும்!

டாக்டர் லார்சன் குடும்ப நிர்வாக முறைகளை உழைப்பாளிகளுக்குப் புகட்டினார். மாதா மாதம் கர்ப்பிணிகளைக் குறிப்பிட்ட இடத்துக்குப்போய்த்தங்களைப் பரீட்சித்துக் கொள்ளும்படி அறிவுறுத்தினர். அவருடைய உழைப்பின் பயனால் அசுத்தமானதும் அருவருக்கத்தக்கதுமான சூழ்நிலையில் பிள்ளைகளைப் பெற்றுவந்த தாய்மார்கள் புதிதாகக் கட்டப்பட்ட வசதிகள் நிறைந்த ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று உதவி பெற்றனர். கர்ப்பிணியின் அறையில் இருந்த 'மருத்துவச்'சிகள் மறைந்து மருத்துவர்களும், நர்ஸ்களும் உலவலாயினர். சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆகாரங்கள் குழந்தைகளுக்குப் புகட்டப் பட்டன. லார்சன், தாய்மார்களைத் தங்கள் குழந்தைகளுக்குப் பசும்பால் புகட்டும்படி வற்புறுத்தினர். அத்துடன் நில்லாமல் பால்பண்ணைகள் ஒழுங்காக நடத்தப்படு

ஏஜண்டுகள் தேவை

"கலைஞன்" மாத இதழ்

(ஆசிரியர்: இசைவாணர் சிதம்பரம், ஜெயராம்.)

தனி இதழ் விலை அணா 4.

முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் எல்லா ஊர்களிலும் உடனே தேவை.

விபரங்கட்கு:—

நிர்வாகி

"கலைஞன்"

த. பெ. நெ. 18 சிதம்பரம்

கின்றனவா என்பதைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்தார். அரசாங்கத்தைச் சட்டம் செய்யவும் தூண்டி வெற்றி பெற்றார்.

சரிசமமான உணவின் (Balanced diet) முக்கியத்வத்தை லார்சன் எடுத்துக் கூறி வந்தும் தொழிலாளிகள் அரிசி யொன்றையே உண்ணும் பழக்கத்தை விடாப்பிடியாகப் பிடித்துவந்தனர். இது அவர் மனத்தைப் புண்படுத்திற்று. தினம் 2½. டாலரே சம்பாதித்து வந்த குடும்பங்கள் பழங்களை வாங்கிப் புசிக்கப் பழக்கப் படுத்திக் கொள்வது என்ன அவ்வளவு இலகுவானதா?

ஆனால் லார்சன் நம்பிக்கை தளர்ந்து போய்விடவில்லை. மாறாக அவர் விளக்கம்தான் முன்னைவிட அதிகமாக வளர்ச்சி பெற்றது. அவர் வர்ண வரிவடிவங்களின் மூலம் சரிசமமான உணவின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டினார். தோட்ட முதலாளிகளை மா, வாழை, அத்தி போன்ற பழங்களை வாங்கித் தொழிலாளர்களுக்கு 'அசலு'க்கே விற்கும் படி கேட்டுக் கொண்டார். அது மட்டுமல்லாமல் வீட்டின் சுற்றுப் புறங்களில் காய்கறி, பழங்கள் ஆகியவற்றைப் பயிரிடும் பழக்கத்தை அம் மக்களுக்கிடையே வளர்த்தார். ஐந்து சதத்திற்கு நல்ல 'புஷ்டி'யான ஆகாரங்களைச் சிறுவர்களுக்கு வழங்கும் படியும் அவா ஏற்பாடு செய்தார்.

17-ம் மாத இறுதியில் டாக்டர் லார்சன் நிர்வாகிகளை அழைத்தார். 174·4 ஆக இருந்த குழந்தை மரணம் 72 ஆகச் சுருங்கிவிட்டதை அவர் பெருமையோடும், பூரிப்போடும் எடுத்துரைத்தார். இந்த '18 மாதத் திட்டத்தி'ற்குப் பின் பிறந்த குழந்தைகள் வலிவோடும், வணப்போடும் இருப்பதைக் கண்ட நிர்வாகிகளால் லார்சனைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை சரிசமமான உணவை உண்ட தொழிலாளிகளின் ஆரோக்கியமும் முதலாளிகளை நம்பிக்கை மூனைக்க அழைத்துச் சென்றது.

ஹவாயின் மகத்துவம் அக்கம்பக்கத்திலெல்லாம் பரவிற்று. கும்பல் கும்பலாக மக்களும், மருத்துவர்களும் ஹவாயின் அற்புதத்தை நேரில் காண ஓடி வந்தனர்.

இன்று அங்கு 64 மருந்துக் கூடங்களும்; 24 ஆஸ்பத்திரிகளும், 38 மருத்துவர்களும்; 86 நர்ஸ்களும் இருக்கின்றனர். மாதாமாதம் கண்மூக்கு, காது தொண்டை ஆகிய உறுப்புக்களுக்கு வைத்தியம் செய்வதில் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் தொழிலாளிகளைப் பரிசோதிப்பதில் ஈடுபடுகின்றனர். கிராமத்திற்குக் கிராமம் சென்று தொழிலாளிகளை எக்ஸ்ரே எடுத்துப் பரீட்சிக்கும் டாக்டர்களும் அங்கு உலவுகின்றனர்.

இன்று ஹவாய் முதலாளிகள், தொழிலாளர் நலனுக்கென்று தங்கள் இலாபத்தில் ஒரு பகுதியை மகிழ்ச்சியோடு ஒதுக்கிவைக்கின்றனர். 'தண்டச் செலவு' என்ற எண்ணம் கல்லறையில் வைக்கப்பட்டுவிட்டது.

சென்ற ஆண்டு 75 சதவிகிதத் தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவியே தேவைப்படவில்லை. 22 சதவிகிதத் தொழிலாளர்கள் ஒரே ஒரு முறையும், 1 சதவிகிதத் தொழிலாளர்கள் இரு முறையும் தான் வைத்திய உதவி பெற்றனர்!

தன் குறிக்கோளை நிறைவேற்றிவிட்ட டாக்டர் லார்சன் அதோடு திருப்தியடைந்துவிடவில்லை. அவர் ஆசையெல்லாம் உலகம் பூராவும் உள்ள கிராம மக்கள் தன் திட்டத்தின்பயனை நுகரவேண்டும் என்பதே. அவர் ஆசை நிறைவேறுமா? என்றைக்கு நிறைவேறும்?

கலையகம் நாட்குறிப்பு

கண்ணைக் கவரும் இருநிற மேலட்டை

விலை அணா ஒன்று

தனிப்பிரதி வேண்டுவோர் 0—1—9 ஸ்டாம்பு அனுப்புக.
100 பிரதி ரூ. 4-௮-0. அனுப்பும் செலவு இனாம்.

கிடைக்குமிடம் :—

எம். சூரி,
14-ஏ, குப்பையர் தெரு, சென்னை-1

ஊராள வந்தவர்களால் உருவாகியது உணவுப் பஞ்சம்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

—இருக்கட்டுமே, அதனாலென்ன—ஒரு மரம் தோப்பாகுமா—ஓரிடத்தில் பஞ்சமில்லை இருப்பதாலேயே ஊரெங்கும் இருப்பதாகச் சொல்வது பொருத்தமாகுமா—இதற்குப் பெயர் சிறந்த வாதமா?” என்று, தேசபக்தர்கள் சிலர், தாம்பரம் சேதியைக் கேள்விப்பட்டபிறகும் கூடப் பேசக்கூடும்.

அப்படிப்பட்ட அருங்குணவான்களுக்கு அரிய விடை தருவதுபோலவே அமைந்திருக்கிறது தோழர் ஆர். வி சாமிநாதன் தரும் கீழ்க்கண்ட கருத்துரை. தோழர் ஆர். வி. சாமிநாதன், சட்டசபை காங்கிரஸ் உறுப்பினர்! இன்பத் திராவிடமே எனது இலட்சியம் என்று வீரமுழக்கம் எழுப்புபவர் அல்ல!

சென்னை சட்டசபையில் சென்ற மாதம் பேசியிருக்கிறார் அவர் :—

“பொதுவாக, கிராமப் பகுதிகளில் எங்குமே, ஏழு நாட்களுக்கும், தினம் ஆறு அவுன்ஸ் வீதம் பங்கீட்டரிசி தரப்படுவதில்லை.

“ஒருநாள் அல்லது இரு நாட்களுக்கு மட்டும்தான் பங்கீட்டரிசியைப் பெறமுடிகிறது கிராமவாசிகளால்.”

இவ்வளவு தெளிவாகக் கூறியிருக்கிறார் தோழர் சாமிநாதன். எனவே, கிராமங்களிலே, உள்ளத்தைத் துன்ப வெள்ளமாக்கும் அளவுக்கு, உணவுப் பஞ்சம், மரணநடனம் புரிந்துகொண்டிருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

“தென்னாட்டிலே, சேலம் கோயமுத்தூர் முதலான பல மாவட்டங்கள் உணவுப் பஞ்சத்தால் உருக்குலைந்து கிடக்கின்றன.

“கிராமப் பகுதிகளில், தொடர்ச்சியாக பல வாரங்களில், பங்கீட்டுக் கடைகளில், உணவுப் பொருள் கிடைப்பதே இல்லை.

“கள்ளச் சந்தையிலே உணவு தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் சர்க்கார் கடையிலோ கொஞ்சமும் கிடைப்பதில்லை.

“இவ்வளவு கொடுமையான உணவுப் பஞ்சம் தென்னாட்டில் இருப்பதை, டில்லி உணவமைச்சர் தோழர் முன்ஷியும், அவருடைய துணை அமைச்சர் தோழர் திருமல்ராவும் தென்னாட்டுக்கு வந்து நேரிலே பார்த்தும் கூட, இப்படிச் சாப்பிடுங்கள் அப்படிச் சாப்பிடுங்கள் என்று ஏதோ தாலாட்டுப் பாட்டுப் பாடிவிட்டுத் திரும்பிவிட்டனரே தவிர, உணவுப் பஞ்சத்தைப் போக்க உருவான பணி ஏதும் புரிந்தனரில்லை.”

—இது பேராசிரியர் ரங்கா ஆட்சியாளர் மீது வீசியுள்ள ஈட்டி! ரங்கா, ஆந்திர மாகாண காங்கிரஸ் தலைவர்—எனவே, அவர்தம் பேச்சினை, கட்சித் துவேஷத்தின் விளைவு என்று கருத்துக் குருடரும் கூறுதல் இயலாது.

“தென்னாட்டிலே, பல இடங்களிலே, கிட்டத்தட்ட பஞ்சநிலையே உருவாகியிருப்பது உண்மைதான்.”

டில்லி ஆட்சிப் பீடத்தில் துணை உணவமைச்சராகக் கொலுவீற்றிருக்கும் கோமான் ஸ்ரீஜத் கே.பி. திருமல்ராவ் திருவாய் மலர்ந்தருளியிருக்கும் திவ்ய வாசகம் இது!

* * *

உணவுப் பஞ்சம், தென்னாட்டை, அனலிடைப் புழுவென வாட்டி வதைக்கிறது. அனைவரும் ஒப்புக் கொள்கிறார்கள் இன்று இவ் உண்மையை! அனைவரும் என்றால் ஆளவந்தார்கள் உட்பட அனைவரும்!

ஆனால் இந்த உணவுப் பஞ்சம் பெரிதும் ஊராள வந்தவர்களின் உதவாக்கரை ஆட்சியால்தான் உருவாகியிருக்கிறது என்பதை மட்டும் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள் ஊராளவந்தவர்கள். இதிலே வியப்பு ஏதுமில்லை. உணவுப் பஞ்சம் நாட்டில் உலவுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் நாங்கள்தான் என்பதை ஒப்புக் கொண்டால், அதன் பிறகு, ஆட்சிப் பீடத்திலே அரைக் கணமும் இருக்கமுடியாதல்லவா—ஆகவேதான் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள் இந்த உண்மையை! ஆனால் அவர்கள் ஒப்புக்கொள்ள மறுப்பதாலேயே, உண்மை, இன்மையாகிவிடாது! உணவுப் பஞ்சத்திற்குக் காரணகர்த்தாக்கள் இந்த ஊராளும் உத்தமர்கள்தான் என்ற மெய்யும், பொய்யாகிவிடாது.

அவர்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சரியே, உணவுப் பஞ்சம் இந்த அளவுக்கு வளர்ந்திருப்பதற்குக் காரணம் அவர்களின் ஆட்சி, ஆட்சிதான்! அதிலே சிறிதும் ஐயமில்லை.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அஞ்சாமைகளில் எல்லாம் தலை சிறந்த அஞ்சாமை.

"அந்த அஞ்சாமைப் பண்பைத்தான் நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் ஏராளமான அளவுக்கு வளர்த்துக்கொள்ள வேண்டும்."

ஆம்! நிச்சயம் வளர்த்துக்கொள்ளத்தான் வேண்டும்! வளர்த்துக்கொள்வதற்கான வழிவகைகளைத்தான் தன்மான இயக்கம் இந்நாட்டில் சென்ற முப்பது ஆண்டுகளாக எடுத்துச் சொல்லி வருகிறது!

சுயசிந்தனையின் பெருமையைச் செந்தமிழகத்தில் நிலைநாட்டச் சுயமரியாதை இயக்கம் துணிந்து முன் வந்தபோது, ஒரு சுயசிந்தனைவாதிக்கு என்னென்ன எதிர்ப்புகள் எப்படி எப்படியெல்லாம் ஏற்படக்கூடும் என்று தாங்கள் எழில்பட எடுத்துக் கூறியிருக்கிறீர்களோ அப்படி அப்படியெல்லாம் எதிர்ப்புகள் ஏற்படத்தான் செய்தன.

சுயமரியாதை இயக்கத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் என்ன கொஞ்சமா? இயக்கத் தோழர்கள் அடைந்த இன்னல்கள் என்ன இலேசானவையா? இயக்க முன்னணி வீரர்கள் பட்ட கல்லடியும் சொல்லடியும்தான் என்ன சாமானியமானவையா? ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் உள்ளம் நடுங்கும், அவ்வளவு ஏராளம், சுயமரியாதை இயக்கத்திற்கு எதிராகப் புறப்பட்ட எதிர்ப்புச் சக்திகளின் எண்ணிக்கை.

"எதிர்ப்புச் சக்திகள் எவ்வளவு ஏராளமாக இருந்தால்தான் என்ன—அவ்வளவையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் சுயசிந்தனைவாதி — அதுவேதான் அஞ்சாமைகட்குள்ளே தலைசிறந்த அஞ்சாமை" என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்களே அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில், அதே வாசகங்களைத்தான், ஓங்கி முழங்கியபடி, சுயமரியாதை இயக்கம், எதிர்ப்புச் சக்திகள் அவ்வளவையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு முன்னேற்றப் பாதையில் முனைந்து நடக்கலாயிற்று.

தாங்கள், அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில், சிந்தனைசக்தியின் சிறப்பைக் குறித்து, அழகுபட எடுத்துப் பேசியபோது, நிச்சயமாக சுயமரியாதை இயக்கம் தங்கள் உள்ளத்திலே நிழலாடிக்கொண்டுதான் இருந்திருக்கும் — அதிலே சிறிதும் ஐயமில்லை.

சுயமரியாதை இயக்கம்தானே, இந்த நாட்டில், சிந்தனைசக்தியின் ஆற்றலை, எண்ணற்ற எதிர்ப்புகட்கிடையே, பட்டிதொட்டி எங்கும் சென்று பாமரர் மனத்திலும் பதியும் வண்ணம், தெள்ளத் தெளிய விளக்கியிருக்கிறது! எனவே, சுயசிந்தனையின் சிறப்பை இந்நாட்டில் விளக்கிப் பேச முன்வரும் எவரும் எப்படி சுயமரியாதை இயக்கத்தை நினைவுபடுத்திக் கொள்ளாமல் இருக்கமுடியும்?

தங்கள் போன்றவர்களெல்லாம் கூட, இப்போது, இவ்வளவு தைரியமாக சுயசிந்தனையின் சிறப்பு குறித்துப் பேசுவதற்கு ஏற்ற சூழ்நிலையை, தன் வியர்வையை, இரத்தத்தை, கஷ்டநஷ்டத்தைக் கொட்டி, உருவாக்கியிருப்பவன் சுயமரியாதைக்காரன்—அதைத் தாங்கள் அன்று குறிப்பிட்டிருக்கலாம் — குறிப்பிட்டிருக்கவேண்டும் — குறிப்பிடுவதுதான் முறை—ஆனல் இந்த சூனுமானுக்களுக்கு அவ்வளவு ஏற்றம் தருவதா என்று எண்ணியோ என்னவோ நீங்கள் அதைக் குறிப்பிட்டுப் பேச மறந்துவிட்டிருக்கிறீர்கள் — பரவாயில்லை, போகட்டும் — எங்களுக்கு நன்றி செலுத்தத் தவறிவிட்டீர் என்றாலும், எங்களுடைய இதயகீதத்தை, சுயமரியாதை இயக்கப் பிரசாரத்தை, சிந்தனைசக்தியின் சிறந்த ஆற்றலை, எந்தக் கருத்தை எடுத்து மொழிவதற்காக உங்கள் தேசீய வட்டாரத்தவரால் பன்னெடுங்காலமாக நாங்கள் தூற்றப்பட்டு வந்தோமோ அதே கருத்தை பல்கலைக் கழகப் புதுப் பட்டதாரிகளிடையே எடுத்துப் பேசியிருக்கிறீர் — பட்டமளிப்புவிழா மேடையை சூனுமானு மேடையாக மாற்றி அமைத்திருக்கிறீர் — அதற்காக எங்கள் நன்றி உங்கட்கு—வாழ்த்தும் வணக்கமும் பாராட்டும் கூட!

இனியும் எங்கேயாவது இது போல சூனுமானு பாணியிலே சொற்பொழிவாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால், எனக்கொரு 'கார்டு' போடுங்கள். — பழைய "திராவிடநாடு", "போர்வாள்" பைண்டு வால்யூம்கள் இருக்கின்றன—அனுப்பிவைக்கிறேன். தங்களுக்குத் தமிழ் தெரியாவிட்டாலும் தெரிந்தவர்களைக் கொண்டு மொழிபெயர்க்கச் சொல்லிப் படித்துப் பார்த்துவிட்டுச் சொற்பொழிவாற்றச் செல்லுங்கள்—இத்தகு கருத்துக்களை, அப்போது, இன்னமும் தெளிவாகப் பேசமுடியும். வணக்கம்.

இப்படிக்கு,
தங்களால் அடிக்கடி சிறைச்
சாலைக்கு அழைக்கப்படுகிற,
பேறு பெற்றிருக்கும்,
தங்கள் தோழன்,
[illegible]

சரிந்த சாம்ராஜ்யம்
மா. இளஞ்செழியன்
இயற்றியது.
★
விலை அணு 10
பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு, சென்னை.

ஒரே முத்தம்!

மு. கருணாநிதியின் இலக்கியச் சித்திரம்
சுவை மிக்க உரையாடல்கள்!
சோபிதமிக்க கதையோட்டம்!
விலை ரூ. **1–0–0**

விலை குறைக்கப்பட்டுள்ளது. வியாபாரிகட்கு தக்க இலாபமுடன் எங்கள் செலவிலேயே அனுப்பிவைக்கிறோம்.

விற்பனையாளர்:
திராவிடன் பதிப்பகம்
P. B. No 18, வேலூர் N. A.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திராவிடர் டைரி—1951

திராவிடர் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு ★ ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு.

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லாவிவரங்களும் அடங்கிய எழில்மிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்! ★ சென்ற ஆண்டுபோல கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* அறிஞர் அண்ணாதுரையின் அரிய பொன் மொழிகள்—சென்ற ஆண்டு டைரியில் வெளிவராதவை, சிறந்தவை, புதியவை.

* புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கருத்துக் கருவூலங்கள்.

* வால்டேர், ரூசோ, இங்கர்சால், பெர்னாட்ஷா, எச். ஜி. வெல்ஸ், எமிலி ஜோலா, ஷெல்லி, வால்ட் விட்மன், காரல் மார்க்ஸ், லெனின், தாமஸ் பெயின், தாகூர், மாஜினி, எம். என். ராய், லின் யூடாங், திரு. வி. க., மறைமலையடிகள் முதலான உலகைத் திருத்திய உத்தமர்கள் நூற்றுக்கணக்கானவர்களின் சிந்தனைக் குவியல்கள்.

* தி. மு. கழக முதலாண்டு வளர்ச்சி முழு விவரம்.

* தி. மு. கழக அமைப்பு முறை.

* தி. மு. கழகச் செயற்குழு, பொதுக்குழு, துணைக்குழு விவரங்களும், உறுப்பினர் பெயர்களும்.

* கழகப் பேச்சாளர்கள் பெயரும் முகவரியும்.

* தி. மு. கழகக் கிளைகள் 520-ன் விவரங்களும், அவற்றின் செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர் பெயர்களும்—மாவட்ட வாரியாக.

* தி. மு. மாணவர் கழக விவரங்களும் செயல் உறுப்பினர் பெயர்களும்.

* தி. மு. க. கொடி—இரு நிறத்தில்.

* பொதுச் செயலாளர் அண்ணா புகைப்படம்.

* திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள்.

* அரசினர் விடுமுறை நாட்கள்.

* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனை வரி வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள், ட்ரங்க் டெலிபோன் கட்டணங்கள் மற்றும் பல இன்றியமையாத குறிப்புகள் நிறைந்துள்ளன.

அழகான அமைப்பு 530 பக்கங்கள் விலை அணா 14

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ 1—0—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—4—0-ம் அனுப்பவேண்டும்.

விற்பனையாளர் கழிவு 20 o/o அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு சென்னை 1.

நாஞ்சில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு

கிருஷ்ணன் கோவில் தியாகராயர் பந்தலில்! டிசம்பர் 29, 30 வெள்ளி, சனியில்!

தலைவர்: இரெ. இளம்வழுதி திறப்பாளர்: என். எஸ். இளங்கோ

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A.(Hon)